ISSN: 2012 - 6352

# தொண்டன்

ஆரம்பம் 1969 பெப்ரவரி    சமய - சமூக - இலக்கிய வெளியீடு    செப்டம்பர் 2010    25/=



## பதவிகள் தேவையானால் நீதிகள் தூரமாமோ?!

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தொண்டன்

**செப்டம்பர் 2010**

மலர்- 42 இதழ்- 08

**ஆசிரியர்**
றொஹான் பேனார்ட்

**இணை ஆசிரியர்**
மலர்வேந்தன்

**துணை ஆசிரியர்கள்**
மெற்றில்டா இராஜேந்திரம்
பெஸ்லீயோ வாஸ்
வயலற் சந்திரசேகரம்
பைந்தமிழ்க்குமரன் டேவிட்

**ஆலோசகர்கள்**
A.G. இராஜேந்திரம்
A.S. யோகராஜா

**கணினி வடிவமைப்பு**
நிரோன்

**ஓவியங்கள்**
சுதா

**வெளியீடு**
சமூகத் தொடர்பு நிலையம்.
திரு / மட். மறை மாவட்டம்

**முகவரி**
சமூகத் தொடர்பு நிலையம்
அ.பெ.எண் - 44
மட்டக்களப்பு.

**பதிப்பகம்**
வணசிங்கா அச்சகம்
மட்டக்களப்பு.


## உள்ளே




| | | |
|---|---|---|
| அன்புடன் உங்களோடு.... | - | 01 |
| பண்பான பிள்ளைகள் | - | 02 |
| சமூக வளர்ச்சிப் பாதையில்... | - | 04 |
| நந்திக் கடலோரம் (கவிதை) | - | 07 |
| மூன்று கிறித்தவ... | - | 08 |
| அம்மா (சிறுகதை) | - | 11 |
| தொண்டனின் சில நிமிடங்கள் | - | 15 |
| காலநிலை மாற்றமும்... | - | 18 |
| அன்ன யாவினும்... (சிறுகதை) | - | 20 |
| மருத்துவம் (நாட்பட்ட சிறுநீரக...) | - | 23 |
| கடுகுக் கதை | - | 24 |
| இலக்கிய மஞ்சரி | - | 25 |
| விவிலியம் கற்போம் | - | 27 |
| அறிவை வளர்ப்போம் | - | 28 |


**ஆக்கங்களுக்குப் பொறுப்பு அளித்தவர்களே (ஆ-ர்)**


**SOCIAL COMMUNICATIONS CENTRE**
P. O. BOX - 44
BATTICALOA.
TEL: 065 - 2226486
E.mail: scctribatti@gmail.com


விலை : **25/=**
ஆண்டு சந்தா **: 400/=**
(தபாற்செலவு உட்பட)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# அன்புடன் உங்களோடு...

விநோதமான அரசியலமைப்புச் சீர்திருத்தங்களையும் விநோதமான தீர்ப்புகளையும் இலங்கையில்தான் கேட்கவும் காணவும் முடிகிறது. உதாரணத்திற்கு ஓர் அரச ஊழியரை மரத்தில் கட்டிவைத்து அவமானப்படுத்திய மேவின் சில்வா குற்றமற்றவர் என அவர் சார்ந்த சிறிலங்கா சுதந்திரக் கட்சி தீர்ப்பு வழங்கியுள்ளது. சம்மந்தப்பட்டவர் இது குறித்துப் புகார் செய்யாததால் அவரைக் குற்றமற்ற வராகக் கணிக்கின்றார்கள்; முடிவெடுத்திருக்கின்றார்கள். இதை எவ்வாறு நியாயமாகக் கருத முடியும்?

ஓர் அநீத விளைவுக்குப் பெருமளவிலான ஆதரவு கிடைத்தாலும் அநீதி அநீதிதான். ஜனநாயக அமைப்பு விதியிலும் ஓட்டைகள் உள்ளன என்னும் உண்மையை நாம் புரிந்துகொள்ளவேண்டும்.

மேவின் சில்வா அவமானப்படுத்திய அரச ஊழியர் தனது உயிர் அச்சுறுத்தல் காரணமாகத் தான் முறையிடவும் இல்லை, வழக்குத் தொடரவும் இல்லை என்பதை அவர் தெரிவிக்காவிட்டாலும் உலகத்திற்குத் தெரியும். ஆகவே பகிரங்கமாகவே குற்றமிழைத்தவர் முறையீடுகள் இல்லாத பட்சத்தில் தண்டிக்கப்படவில்லை என்பது விநோதந்தானே! கண்ணிலே மண்ணைத் தூவும் ஏமாற்று வித்தைக் காரர்கள். "மக்கள் ஆதரிப்பதால் கருணைக் கொலை சரியாகிவிடாது" என்று அவுஸ்ரேலிய பேராயர் ஏட்ரியன் டோயல் கூறிய கருத்து இவர்களுக்கு மரண அடியாக உள்ளது.

அதிகாரப் பெருச்சாளிகள் கதிரைகளைக் காப்பாற்றித் தம்மைத் தக்கவைக்கவே 17ம் திருத்தச் சட்டத்தில் மேலும் திருத்தங்களைக் கொண்டுவர முன்வந்திருக்கிறார்கள். இவ்வாறு அதிகாரத்தை மாத்திரம் கௌவிக்கொள்ள ஆசைப்படும் வர்க்கத் தினர் அதிகாரப் பரவலாக்கலுக்கு எவ்வாறு இணங்கு வார்கள்? தங்கள் சொந்த நலனுக்காகவே இலங் கைக்குள் நுழைந்துள்ள இந்தியா இந்த சின்னத் தனமான, சில்லறை அரசியல் வியாபாரத்தைக் கண்டுகொள்ள வாய்ப்பே இல்லை. மொத்தத்தில் இந்தியா பணத்தை இலங்கைக்குக் கொண்டுவந்து, தனது தொழிலாளர்களை வேலைக்கமர்த்தி, பணத்தை மீண்டும் இந்தியாவுக்கே எடுத்துச் செல்கிற கைங்கரி யத்தில் விநோதமாகவே களத்தில் இறங்கியுள்ளது.

இப்படியாக, சொந்த இலாபத்திற்காக நாட்டை, நாட்டின் இறைமையை சிதறடிப்பதால்தான் L.P.ஆரியவதி போன்ற ஏழைப்பெண்கள் வெளிநாடு களுக்கு வேலை தேடிப்போகவேண்டி ஏற்படுகிறது. பெண்களை மூடிமறைத்துப் பார்க்கும் எண்ணெய்க் கிணறுகள் இவர்களை ஈவிரக்கமின்றி சிதைக்கின் றனர். சமுர்த்தி உதவித் தொகை அதிகரிக்கப்பட்டு, மானியங்கள் போதுமான அளவு வழங்கப்படும் பட்சத்தில் பெண்கள் வெளிநாடுகளுக்கு வேலை தேடிச் செல்லவேண்டிய தேவையும் ஏற்படாது, உள்நாட்டில் இடம்பெறும் குடும்ப சீர்கேடுகளும் இல்லாதொழிக்கப்படும்.

எதுவாக இருந்தாலும் இவ்வாறான நபர்கள் ஊடாக, சம்பவங்கள் ஊடாக நாம் ஒவ்வொருவரும் பாடம் கற்றுக்கொள்ளவேண்டும். அதிகாரத்தில் நாட்டம் வேண்டாம்; அதிகாரத்தைத் துஷ்பிரயோகம் செய்ய எண்ணவும் வேண்டாம். அதாவது இயேசு, தனது வாழ்வாலும், போதனையாலும், இறப்பாலும், உயிர்ப்பாலும் இந்த உலகிற்கு விட்டுச் சென்ற உண்மை சட்டதிட்டங்களல்ல, ஆசாரங்கள் அல்ல. மாறாக மனிதநேயம் மட்டுமே; அது மதிக்கப்பட வேண்டும். ஆம் நாமும் இறைவனைப் பிறரில் காண்போம்; தனிமனித சுதந்திரத்தை மதிப்போம்; இறையாட்சியை இவ்வுலகில் கட்டியெழுப்புவோம்.

**– ஆசிரியர்**



## இறைவாக்கு

**"அவர்களுக்கு நான் வேறோர் இதயத்தையும் புதியதோர் ஆவியையும் வழங்குவேன். கல்லான இதயத்தை அவர்கள் உடலினின்று களைந்துவிட்டு, சதையாலான இதயத்தை அருளுவேன்"**

(எசா: 11:19)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

- பாரதி கெனடி

# பண்பான பிள்ளைகள்

எல்லா மக்களும் ஏதோ ஒரு வகையில் கவலைப்பட்டுக்கொண்டுதான் இருக்கிறார்கள். தம் பிரச்சினை, தம் குடும்பப் பிரச்சினை, தம்மூர்ப் பிரச்சினை, தம் நாட்டுப் பிரச்சினை, அதற்கும் அப்பால் உலகளாவிய பிரச்சினை என்று பல கவலைகட்கும் கஷ்டங்களுக்கும் முகங் கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள்.

இவ்வேளையில் பெற்றோர்களுக்கு மிகவும் மனவேதனையாகவும் பெரும் சவாலாகவும் உள்ள மிக முக்கிய விடயம் தம் பிள்ளைகளை எவ்வாறு பண்பாளர்களாக வளர்ப்பது என்பதுதான். குழந்தைச் செல்வம் இல்லையே என்பதும் கவலை, அந்தக் குழந்தைச் செல்வத்தை எவ்வாறு ஒழுக்கமானவர்களாக, பண்பாளர்களாக வளர்ப்பது என்பதும் கவலை.

சீராக் 22ம் அதிகாரம் 3ம் வசனத்தில் நற்பயிற்சி பெறாத மகனைப் பெற்ற தந்தை இகழ்ச்சி அடைவார்; அத்தகைய மகளோ இழிவைக் கொணர்வாள் என்று கூறப்பட்டுள்ளது. நற்பயிற்சி என்பது நல்லொழுக்கம், நற்பண்புகள் பற்றிய ஒழுங்குவிதிகளைக் கடைப்பிடிப்பது அல்லது அவற்றைத் தம்முள் பயிற்றுவித்துக் கொள்வது என்றாகிறது. இவ்வாறாக பெற்றோர் தம் மக்கட் செல்வங்களுக்கு ஒழுக்கத்தை, பண்பை, நற்பழக்கவழக்கத்தினைப் பயிற்றுவித்தல் வேண்டும்.

இன்றைய இளைய சமுதாயத்தினை நோக்கினால் பாடசாலை மாணவர்களானாலும் சரி, அவர்கட்குக் கையடக்கத் தொலைபேசி, கணினி, மோட்டார் வண்டி என்று பல்வேறு பொருட்கள் பெற்றோரால் அல்லது அவர்களது நலன்விரும்பிகளால் கொடுக்கப்பட்டிருக்கின்றன. பல பிள்ளைகள் வெளிநாட்டுச் செலாவணியையும் பயன்படுத்துகிறார்கள், காலத்தின் கோலம்! தொழில்நுட்ப வசதி,





Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

எம் நாட்டின் கலாசார மாற்றம் போன்றவை எமது பிள்ளைகளை இத்தகைய சூழலுக்கு இட்டுச் சென்றுவிடுகின்றன. இவ்வாறு அவர்கள் தம்மை மறந்த நிலையில், தாம் செய்வது என்னவென்று தெரியாத நிலையில், தம் வாழ்வினை, தம் வாழ்க்கையின் பாணியினை அமைத்துக்கொண்டு வாழுகின்றார்கள். புதிய சினிமாக்கள், கலாசார மாறுதல் போன்றவற்றால் தமது பண்புகள் பாதுகாக்கப்படவேண்டியவை என்பதனை மறந்து, ஒழுக்கத்தினை மறந்து தம் வாழ்வினை வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். தாம் இப்படித்தான் வாழவேண்டும் என்று எண்ணாமல் எப்படியும் வாழலாம் என்று வாழ்ந்து வருகின்றனர்.

சீராக் 22ம் அதிகாரம் 8ம் வசனத்தில் ஒழுக்கத்தில் வளர்க்கப்படாமல், இறுமாப்பும், பிடிவாதமும் கொண்ட மக்கள் தங்களின் குலப் பெருமைக்கு அவமானம் கொணர்வார்கள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. பிள்ளைகள் ஒழுக்கத்தில் வளர்க்கப்படல் வேண்டும். இறுமாப்பு, பிடிவாதம், பொருத்தமற்ற பேச்சு, வாக்குவாதம் என்பவற்றைத் தவிர்த்துக்கொள்ளுதல் வேண்டும். இதற்காகப் பெற்றோர்கள் தம் பிள்ளைகளின் உடல், உள, ஆன்மீக வளர்ச்சியில் மிகவும் உன்னிப்பாகவும், அவதானத்துடனும் இருத்தல் வேண்டும்.

பிள்ளைகளின் வளர்ச்சியில் பெற்றோர் மாத்திரமின்றி ஆசிரியர்கள், அயலவர்கள், ஏன் சமுதாயங்கூட அதிக அக்கறையுடன் செயல்படவேண்டும். பண்பான பிள்ளைகளின் உருவாக்கம் எமது சமுதாயத்தை வளப்படுத்துவதுடன் சிறப்பான சமூக வளர்ச்சியைக் கொண்டுவரும். நல்ல பிரசைகளை உருவாக்குவது நம் ஒவ்வொருவரினதும், விசேடமாகக் கத்தோலிக்கர் ஒவ்வொருவரினதும் கடமையாகும். இவ்வாறு நல்ல பண்பாளரை உருவாக்குவது நம் தேவனுக்கு நாம் செய்யும் கைமாறு.


## காற்றில் கலந்துவரும்....

**இலங்கை வானொலி தேசிய சேவையில்**

**கத்தோலிக்க நிகழ்ச்சிகள் - தமிழ்**

**ஒக்டோபர்– 2010**

**கத்தோலிக்க நற்சிந்தனை** - காலை 5.55 **மணி**

**நாள்:** *09, 10, 11, 12, 13, 14, 15, 23, 24, 25, 26, 27, 28, 29*

**சிறுவர் உலகம் – மாலை 7.00 மணி**

**நாள்:-** *05, 19*

**புதிய உலகம் – மாலை 7.00 மணி**

**நாள்:-** *03, 17, 31*

**நிகழ்ச்சித் தொகுப்பு: மலர்வேந்தன்**

*தொடர்பு: சமூகத் தொடர்பு நிலையம், அ.பெ. எண் – 44, மட்டக்களப்பு.*

**சனி, ஞாயிறு தினங்களில்:** செபம், **கத்தோலிக்க நற்சிந்தனை**

**சக்தி FM, காலை 5.00 மணி**

*வழங்குபவர்: அருட்தந்தை ஞொஞான் பேணாட்*



# சமூக வளர்ச்சிப் பாதையில் சட்டமும் பெண்களும் அவர்களது உரிமைகளும்

சட்டத்தரணி. கே. டிலனி

இவ்விஞ்ஞான யுகமானது மனித உரிமைகள் பற்றிப் பாரியளவில் பேசப்படும் யுகமாகவும் அதே மனித உரிமைகள் மழுங்கடிக்கப்படும் அல்லது மீறப்படும் யுகமாகவும் காணப்படுகிறது. எனவே மனித உரிமைகள் பற்றிக் குரலெழுப்பும் இச்சமூகமானது பெண்களின் உரிமைகள் பற்றிக் கொண்டுள்ள அதீதப் போக்கு மற்றும் அதற்குச் சட்டம் அளிக்கும் சான்று என்பவற்றை ஒவ்வொருவரும் அறிந்திருக்க வேண்டியது அவசியமானதொன்றாகும்.

தொன்றுதொட்டு ஆண்களைக் குடும்பத் தலைவர்களாக அவர்களின் வழிகாட்டல்களின் கீழ்ச் செயலாற்றும் குடும்ப சமூகக் கட்டமைப்பு முறைமையே பின்பற்றப்பட்டு வருகின்றது. குடும்பத்தில் தலைவனாகத் தந்தை, தொடர்ந்து சகோதரன், கணவன் என குடும்பக் கட்டமைப்பக்கு ஏற்ப எவ்விதத் தேர்தல் முறைமையோ அல்லது கால வகுப்புமுறையோ இன்றி தந்தைவழிச் சமூகம், சுமுகமான ஓர் ஆட்சிமுறையை நிலைநாட்டி வருகின்ற முறைமையானது தந்தைவழிச் சமூகமுறை (Patriarchal Society) என அழைக்கப்படுகின்றது.

இவ்வாறானதொரு கட்டமைப்பில் பெண்கள் ஆண்களுக்குக் கட்டுப்பட்டவர்களாக தமது சுதந்திரங்களை மட்டுப்பாட்டுடன் அனுபவிக்க வேண்டிய தேவை பெண்பாலாரிடையே திணிக்கப்பட்டதாகவும் சமூக எதிர்பார்ப்பாகவும் காணப்படுகின்றது எனலாம்.


சமூகத்திற்காக சமூகத்தை வடிவமைப்பதற்காகவே சட்டம் உருவாக்கப்பட்டது. இச்சட்டமானது பெண்களின் உரிமைகள் பற்றி எவ்வாறு ஏற்பாடு செய்கின்றது? மற்றும் அதன் சர்வதேசத் தராதரங்கள் பெண் உரிமைகள் பற்றி உத்தரவாதம் செய்பவை யாவை என்பதை நோக்குவது சிறந்தது. இந்த வகையிலே பெண்கள் உரிமைகளை சர்வதேசச் சட்டம் எவ்வாறு அங்கீகரிக்கின்றது என்று நோக்குவோமானால் ஐக்கிய நாடுகள் சபையின் 1948ம் ஆண்டின் மனித உரிமைகள் மீதான பிரகடனமானது (UDHR) "மனிதர்கள் யாவரும் சட்டத்தின் முன் சமமானவர்கள்; அதே போல் சட்டத்தினால் பாதுகாக்கப்பட வேண்டியவர்கள்" என ஏற்பாடு செய்ததன் மூலம் சட்டத்தின் முன் ஆண் பெண் இருபாலாரும் ஒரே விதமாகவே கணிக்கப்படுவதோடு சமத்துவத்தையும் ஏற்பாடு செய்கின்றது. இதனையே குடியியல் மற்றும் அரசியல் உரிமைகள் மீதான சமவாயமும் (ICCPR) உறுதி செய்வதோடு பெண்களுக்கான குடியியல் மற்றும் அரசியலில் காணப்படும் சமத்துவத்தையும் உத்தரவாதஞ் செய்கின்றது. மேலும் ஐக்கிய நாடுகள் சபையின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

சட்டமாகிய பெண்களுக்கெதிரான எல்லாப் பேதங் காட்டுதல்களையும் இல்லாதொழிப்பதற்கான சமவாயமானது பால் அடிப்படையிலான வேறுபாடு உட்பட எந்த வேறுபாடுமின்றி எல்லா உரிமைகளையும் சுதந்திரங்களையும்பெற பெண்கள் உரித்துடையவர்கள் என ஏற்பாடு செய்கின்றது.

எனவே ஐக்கிய நாடுகள் சபையில் உறுப்பு நாடாக விளங்கும் எமது இலங்கை நாடும் எமது சட்டத்தில் சர்வதேச தராதரங்களை உள்வாங்கி, அதற்கமைய சட்டமியற்றியுள்ளதா என்பதற்கான சான்றுகளாக இலங்கை சட்டத்தினுள் பெண்களின் உரிமைகள் பற்றி ஒப்புநோக்கப்பட வேண்டியது காலத்தின் தேவையாகும். இந்த வகையில் நாட்டின் மீயுயர் சட்டமாகிய அரசியலமைப்பின் (Constitution of Republic of Sri Lanka 1978) உறுப்புரை 12 "சட்டத்தின் முன் எல்லா ஆட்களும் சமன். அவர்கள் பால் இனம் மதம் அடிப்படையில் பாரபட்சமாக நடத்தப்படக்கூடாது" என தெளிவாக ஏற்பாடு செய்வதோடு பெண்கள் பிள்ளைகள் மற்றும் சிறுவர்கள் நலன் கருதி விசேட சட்டங்களை ஆக்கமுடியும் எனவும் விளக்குகின்றது.



"கதாநாயகன் கதாநாயகிய ரெண்டு கையாலயும் தூக்கி வச்சிருக்கான். பிறகு ஏன் கதாநாயகிக்குக் கீழ ஒரு ஸ்டூல் வச்சிருக்காங்க?"

"கதாநாயகனால கதாநாயகியத் தனியாக தூக்க முடியாதாம்"

• மணி

மேலும் இலங்கையில் தொழிற் சட்டமானது பெண்கள் தொடர்பாக விசேட ஏற்பாடுகளையும் கொண்டுள்ளது. அதாவது 1956ம் ஆண்டின் 47ம் இலக்க பெண்கள், இளம்பராயத்தினர் மற்றும் சிறுவர்களை வேலைக்கு அமர்த்தும் சட்டமானது பெண்களை இரவு நேரங்களில் வேலைக்கமர்த்துவதாயின் அவர்களது விருப்புக்கு மாறாக வேலைக்கமர்த்தக் கூடாது எனவும் தொழில்தருநரின் எழுத்து மூலமான சம்மதத்துடன் தான் வேலைக்கமர்த்த வேண்டுமெனவும் ஏற்பாடு செய்கின்றது. அத்தோடு இரவு வேலைக்கமர்த்தப்படும் பெண்களுக்கு சாதாரண கொடுப்பனவின் 1.5 மடங்குக்கு குறையாத கொடுப்பனவு செலுத்தப்பட வேண்டும் எனவும் ஒரு மாத காலப்பகுதியில் 10 நாட்களுக்கு மேல் வேலைக்கு அமர்த்தப்படலாகாது எனவும் ஏற்பாடு செய்கின்றது. இன்னும் கடைக்காரியாலய சட்டம் மற்றும் தொழிற்சாலைகள் கட்டளைச்சட்டம் என்பன தொழிலில் ஈடுபடும் பெண்களுக்கு உரிய பாதுகாப்பு ஏற்பாடுகளை சிறப்பான முறையில் எடுத்துக் கூறியுள்ளது. தொடர்ந்து மகப்பேற்றுக் கட்டளைச்சட்டமானது வேலைக்கு அமர்த்தப்பட்டுள்ள பெண் தமது மகப்பேற்றுக் காலத்தினுள் பெற்றுக்கொள்ளக்கூடிய சலுகைகள் மற்றும் உரிமைகளை எடுத்தியம்புகின்றது. அதாவது பிரசவ விடுமுறை சம்பளத்துடன்கூடிய மூன்றுமாத காலப்பகுதிக்கு வழங்கப்படுமெனவும் அதன் பிறகு வேலைக்குச் சமூகமளிக்கும் நிலையில் தாய்ப்பாலூட்டுவதற்கான அவகாசமாக இரு மணித்தியால அவகாசம் வழங்கப்படும் எனவும் ஏற்பாடு செய்கின்றது. இத்தொழில்புரியும் பெண்களுக்கான உரிமைகள் அரச மற்றும் தொழிற்சாலைகள், கடைகள் போன்ற ஸ்தாபனங்களுக்கு ஏற்ப வேறுபட்டுக் காணப்படுகின்றது.



இன்னும் குடியியல் மற்றும் குற்றவியல் பின்னணிகளில் நோக்கும் போதும் சட்டம் பெண்களுக்குப் பாதுகாப்பான ஏற்பாடுகளையும் சட்டத்தில் உள்வாங்கியள்ளமை தெளிவாகின்றது. குறிப்பாக 2005ம் ஆண்டின் 34ம் இலக்க குடும்ப வன்முறைகள் சட்டமானது வீட்டு வன்முறைக்கு உட்படுத்தப்படும் நபருக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

உரிய பாதுகாப்பை வழங்குகின்றது. இங்கு சட்டமானது வெளிப்படையாக பெண்கள் என்ற பதத்தை குறிப்பிப்படாதிருந்தாலும் பெரும்பாலும் வீட்டு வன்முறைக்கு உட்படுத்தப்படும் வர்க்கமாக பெண்களே காணப்படுகின்றனர். இச்சட்டத்தின் கீழ் நீதிமன்றின் பாதுகாப்புக் கட்டளையை பெரும்பாலும் பெண்களே பெற்றுள்ளார்கள் என்பதற்குத் தீர்ப்புச்சட்டங்களே சான்றாகும். அத்தோடு பொதுத் திருமணக் கட்டளைச் சட்டமானது திருமணத்திற்கான வயதெல்லையை 18 ஆக வரையறை செய்வதோடு, திருமணத்துக்கு மணமக்களின் சுயமான சம்மதமும் அவசியம் என ஏற்பாடு செய்கிறது. காரணம் ஒரு பெண்ணோ ஆணோ உடல் உள ரீதியாக திருமணத்திற்கும் குடும்ப வாழ்க்கைக்கும் தகுதியடைவது இப்பருவத்திலாகும் என்பதால் பதினாறு வயதிற் குட்பட்ட பெண்ணின் சம்மதத்துடனோ அல்லது அவரது சம்மதமின்றியோ உடலுறவில் ஈடுபடுதல் கடூழியச் சிறைத்தண்டனைக்குரிய குற்றமாகும் என குற்றவியல் கோவை ஏற்பாடு செய்கின்றது. இன்னும் கருவுற்ற பெண்ணின் கருவைக் கலைத்தல் குற்றவியல் கோவையின் பிரகாரம் கடுமையான தண்டனைக்குரிய குற்றமாக ஏற்பாடு செய்கின்றது. இங்கு ஒரு பெண் தான் கருத்தரிப்பதற்கான அல்லது தாய்மை நிலை எய்துவதற்கான உரிமையைக் கொண்டுள்ளார். அக்கருவைத் தாங்குவதால் தாயின் உயிருக்குத் தீங்கு ஏற்படும் பட்சத்தில் பெண்ணின் உறவினரின் சம்மதத்துடன் கருவைக் கலைக்கலாமேயொழிய, சட்ட முரணாகக் கருவைக்கலைத்தல் பாரிய குற்றவியல் குற்றமாகச் சட்டம் ஏற்பாடு செய்கின்றது. இவ்வாறாக சட்டம் பெண்களின் உரிமைகளை வரையறை செய்கின்றது. அத்துடன் இன்றைய கால கட்டத்தில் பெண்கள் குடியியல், அரசியல், தொழில் ரீதியாக ஆண்களுக்குச் சமனான உரிமைகளை அனுபவித்து வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது. இருந்தாலும் பெரும்பாலான பெண்களின் உரிமைகள் சட்டத்தால் உத்தரவாதப்படுத்தப்படும் அதேவேளை உலகின் பல பாகங்களில் மீறப்பட்டும் வருகின்றமை இன்றைய பெண்ணியல் வாதிகளின் உருவாக்கத்திற்கும் பெண் சம அந்தஸ்துக் கோஷங்களுக்கும் காரணம் எனலாம். எனவே உரிமைகள் என்பன ஆண் பெண் இருபாலாருக்கும் சட்டத்தால் வரையறை செய்யப்பட்ட ஒன்றாக இருந்தாலும் சமூகத்தின் பாங்கில் சமத்துவத்தின் உண்மைநிலை மறையுண்மையாகவும் பாரபட்சமுள்ளதாகவுமே காணப்படுகின்றது. ●



"இந்த தெருவோரத்தில இருந்த பிள்ளையார எங்க காணல்ல?"

"வீதி விஸ்தரிப்பில அவரும் மாட்டித்தார். உண்டியல அதிகாரிகள் எடுத்திட்டாங்க போல..."

● மணி



## குறும்(புப்)பா - 46

அழகுக்கு அவளன்றோ அளவு
அறிவுக்கும் அவள்தானே தெரிவு
தழல்மீது வீழ்ந்தசிறு புழுவாகத் துடிக்கின்றாள்
தனமில்லை யாந்தாலி முறிவு

~ மலர் ~



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# நந்திக் கடலோரம்...

நந்திக் கடலோரம்
நீந்திவருந் தென்றலே நீ
அந்திக் கரைசலிலே
அன்றெழுதிப் போனதென்ன
எண்ணிப் படிக்கின்றேன்
உன்மொழியோ புரியவில்லை
அன்று நடந்தகதை
அறிந்தவளே நீதானே

மன்றில் வந்தொருநாள்
வாய்திறந்து நீபேசு
அன்றே உயிர்துறப்பேன்
அதுவரையென் உயிர்தாங்கும்
உன்னுட் புதைத்துவைத்த
ஒருபெரிய ரகசியத்தை
மண்ணில் போட்டுடைத்தென்
மனவலியைப் போக்கிவிடு

வன்னிக் களத்திலெங்கள்
சோதரர்கள் வைத்தஓலம்
மண்ணில் ஒருவருக்கும்
கேட்கவில்லை தென்றலழ
என்ன சொல்லியிவர்
வீழ்ந்துயிரை மாய்த்தாரோ
நின்று ஒருவரியில்
சொல்லிவிட்டுப் போய்விடுநீ

தென்றலே நீமட்டும்
புயலாகிப் புல்லர்களை
அன்றே அழித்திருந்தால்
உன்னைத் தொழுதிருப்பேன்
நின்று தமிழ்மண்ணை
உண்டதில் உடலெடுத்து
அன்றுநீ இழைத்த
அத்தனையும் துரோகமழ

எங்கள் உயிர்குடித்து
உறங்குதுபார் நந்திக்கடல்
உண்ட களைப்பதற்கு
உண்மைதனைப் பறையாது
இன்றல்ல இன்னுமோர்
ஈரேழு யுகம்வரினும்
தன்னுள் புதைத்துவைத்த
ரகசியத்தைச் சொல்லாது

அங்கோர் ஊரிருந்த
தெங்கே அதைக்காட்டு
எங்குஅதைப் புதைத்துவைத்தாய்
ஈண்டெனக்குச் சொல்லு
தேடியதைத் தோண்டியுடன்
நானெடுக்க வேண்டும்
வேரறுந்து போகாமல்
நட்டுவைக்க வேண்டும்

பாதியுயிர் உள்ளிருந்து
பாழுமுடல் வாழும்
மீதிஉயிர் காற்றினிடை
மாய்ந்ததையோ தேடும்
ஆண்டுநிறை வாகவந்து
ஆயிரமாய்ப் போகும்
மாண்டவரோ தாம்விடுத்த
சாபம் நின்றுகொல்லும்

● அ.ச. பாய்வா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

தொடர்ச்சி...

# மூன்று கிறித்தவ தமிழ் இலக்கிய நூல்களின் நூலாராய்வு 10

ஒரு படைப்பாசிரியரின் இலக்கியத் தரம் அவர் படைத்த நூல்களாலோ அல்லது அவரைப் பற்றிய வரலாற்று நூல்களாலோ மதிப்பீடு செய்வதிலும் பார்க்க, அவரது படைப்பை இலக்கிய வரலாறு எவ்வாறு கணிப்பீடு செய்கிறது என்பதைக் கொண்டே மதிப்பிடல் தக்கதொன்று. அவ்வகையில் பின்வரும் இலக்கிய வரலாறுகளில் கிறித்தவக் கம்பனின் தமிழ்ப் பணி, கிறித்தவ இலக்கியப் பணி ஆதியன மதிப்பீடு செய்யப்பட்டுள்ளதையும் கவனிக்கலாம்.

**01. பக்தி இலக்கியம் - ப.அருணாசலம் 1973**
**02. காப்பியத் திறன் - இளவரசு. சோம 1973**
**03. கம்பராமாயணம் - 1964**
**04. தொடையதிகாரம் - புலவர் குழந்தை 1967**
**05. யாப்பதிகாரம் - புலவர் குழந்தை 1972**
**06. ஒப்பியல் இலக்கியம் - கைலாசபதி**
**07. திருக்குறள் யாப்பமைதி -**
**- சண்முகப்பிள்ளை - 1971**
**08. ஒரு நூற்றாண்டுத் தமிழ்க் கவிதை**
**- சீனிவாசராக - 1970**
**09. தமிழ் ஆராய்ச்சியின் வளர்ச்சி**
**- சுப்பிரமணிய ஐயர் - 1971**

கிறித்தவக் கம்பனைப் பற்றிய ஆய்வுகளும் நூல்களும் பல உள்ளன என்பதை இரட்சணிய யாத்திரிகம் ஓர் ஆராய்ச்சி என்ற நூலிற் காணலாம். மேலே தரப்பட்ட நூல்களின் உசாத் துணையுடன் ஆசிரியரின் வரலாற்றைக் காண்போம். இவற்றைவிட ஆங்கில மொழியில் எழுதப்பட்ட வரலாற்று ஆவணங்களாலும் கிறித்தவக் கம்பனையிட்டு அறிய முடியும். இவற்றைவிட அவர் தனது படைப்புகளை வெளியிட்டபோது எழுதிய முகவுரை வாயிலாகவும் அவர் தன்னை வெளிப்படுத்தியுள்ளார் என்பதையும் குறிப்பிடாமல் இருக்க முடியாது.

இலக்கியம் படைப்பவர்கள் தாம் படைக்கும் கருப்பொருள் பற்றிய அனுபவம் உள்ளவர்களாக இருக்கவேண்டிய அவசியமுண்டு. அவ்வாறு இருந்தால்தான் அப்படைப்பின் கருதுகோள் முட்டற வெளிப்படும். சிறப்பாகச் சமய இலக்கியங்களைப் படைப்போர் அச்சமயப் பக்தி அனுபவங் கொண்டவர்களாக இருக்கவேண்டியது மிக மிக முக்கியம். இதனாற்றான் கிறித்தவர்களல்லாத பலர் படைத்த கிறித்தவ சமய இலக்கியங்கள் கனிந்த கனிகள் உதிர்வதுபோல குறுகிய காலத்தில் மறைந்துவிடுகின்றன.

இக்கருத்து கிறித்தவ இலக்கியங்களுக்கு மட்டுமல்ல ஏனைய சமயங்களுக்கும் பொருந்துவதொன்று.

இருபது நூற்றாண்டுகளுக்கு முன் தோன்றிய வீரமாமுனிவரின் தேம்பாவணி, கிறித்தவக் கம்பனின் இரட்சணிய யாத்திரிகம் முதலியன என்றும்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



## மக்கள் ஆதரித்தால் கருணைக்கொலை சரியாகிவிடாது - அவுஸ்திரேலிய ஆயர்

அவுஸ்திரேலியாவின் டாஸ்மானியா மாநில அரசின் ஆதரவைப் பெற்றுள்ள கருணைக்கொலை பரிந்துரைச் சட்டம் குறித்து தன் ஆழ்ந்த கவலையை வெளியிட்டுள்ளார் அம்மாநிலத் தலைநகர் பேராயர் ஏட்ரியன் டோயல். பொதுமக்கள் ஆதரவளிப்பதால் மட்டும் கருணைக்கொலை சரியானதாகிவிடாது என்ற ஹோபட் பேராயர், கருணையின் அடிப்படையில் என்ற தவறான எண்ணத்துடன் ஆற்றப்படும் இச்செயல், மனித மாண்பிற்கான மதிப்புடன் ஒத்துப்போவதில்லை என்றார். கருணைக் கொலையை மாண்புடன் கூடிய மரணம் என முன்னேற்ற முயல்வது ஏனைய மரணங்கள் அனைத்தையும் மாண்பற்ற மரணங்களாகச் சித்தரிப்பதுபோல் உள்ளது என அவுஸ்திரேலிய பேராயர் டோயல் தெரிவித்தார்.

நிலைத்திருப்பதற்குக் காரணம் அதை யாத்தவர்களின் சமய, பக்தி அனுபவங்கள் எனல் மிகையன்று. இந்த அடிப்படையில் ஜான் பனியன் எனும் கிறித்தவ அடியான் படைத்த முதல் நூல், கிறித்தவ அடியான் கிருட்டின பிள்ளை அவர்கள் தமிழில் எழுதிய வழிநூல் இரண்டுமே இலக்கிய மதிப்பைப் பெற்றுத் திகழ்கின்றன. முன் ஆராய்வில் ஜான் பனியனின் வாழ்க்கை வரலாற்றுச் சுருக்கத்தைப் பார்த்தோம்.

தமிழ் இலக்கிய வரலாற்று ஆசிரியர் எம்.எசு.பூரணலிங்கம் பிள்ளை அவர்களால் தமிழ்ப் பனியன் எனவும், டாக்டர் தெ.பொ.மீனாட்சி சுந்தரனார் அவர்களால் உண்மையான தமிழ்க் கிறித்தவப் புலவர் எனவும், சோமசுந்தரப் பூவண்ணன் அவர்களால் மகா வித்துவான் எனவும் மற்றும் தமிழறிஞர்கள் பலரால் கிறிஸ்தவக் கவியரசர், மீட்புக் கவிஞர், நற்செய்திக் கவிஞர், அருட் கவிஞர் என்றெல்லாம் போற்றப்பட்டதுடன் கிறித்தவக் கம்பன் என்ற முத்திரைப் பெயராலும் நிலைத்த புகழாலும் மதிக்கப்படுகிறார். 1894ம் ஆண்டில் இவரது இரட்சணிய யாத்திரிகம் வெளிவந்த காலை நற்போதம் இதழில் அதற்கொரு மதிப்பாய்வை சுவிசேசமுத்து என்பவர் எழுதினார். அதில் கம்பராமாயணத்தையும் இரட்சணிய யாத்திரிகத்தையும் ஒப்பீடு செய்த அவர் கிருட்டின பிள்ளை அவர்களைக் கிறித்தவக் கம்பர் எனப் புகழாரஞ் சூட்டியதால் அவருக்கு இந்தப் பெயரும் மதிப்பளித்தது. அடுத்து அத்தகைய கவி மன்னரின் வாழ்க்கைச் சுருக்கத்தைக் காண்போம்.

நெல்லுயரத் தொல்லை அகலும் தெங்கு வளரத் தங்கம் கொழிக்கும் வயல்களில் மாதர்தங் கயலும் வாய்க்காலிற் பாயுங் கயலும் போட்டி போட்டுக் குதிக்கும் நீரும் போரும் உயர்ந்து பயன் தரும் வளமுடையது திருநெல்வேலிச் சீமை. அம்மாவட்டத்தில் கரையிருப்பு என்றொரு ஊர். வைணவரும் வேளாளரும் வாழும் சிறப்புடைய அக்கிராமத்தில் வாழ்ந்த சங்கரநாராயணன் என்பார்க்கும் தெய்வநாயகி அம்மையாருக்கும் 1827 ஏப்ரல் மாதம் 28ம் நாள் பிறந்த தமிழ் மாணிக்கமே கிருட்டின பிள்ளை என்னும் மகவு. இவரது தம்பியின் பெயர் முத்தையா பிள்ளை. கிருட்டின பிள்ளை அவர்களை 14ம் வயதிலே 9 வயது முத்தம்மாளுக்கு மணவாளனாக்கி அவரின் பெற்றோர் களிகூர்ந்தனர். பள்ளிப் பருவத்திலே சம்சாரியான அவருக்குப் பெற்றோரின் பாதுகாப்பு மிக்கிருந்தது.

அக்காலத்தில் தன் கிராமத்திலும் அயற் கிராமங்களிலும் கிறித்தவ மதம் பரவத் தொடங்கியதைக் கண்ட பதினெட்டு வயதுக் காளையான கிருட்டின பிள்ளைக்கு மத உணர்வு ஓங்கி நின்றது. வைராக்கிய வைணவரான இவரால் தமது நாட்டில் அந்நிய நாட்டவரால் வேறு மதம் ஒன்று பரப்பப்பட்டு நிலைகொள்வதையும் அதற்குத் தம் மக்கள் அடி பணிந்து போவதையும் பொறுக்க முடியவில்லை. அதனால் துடிப்பான வயதில் தன் தோழர்களுடன் சேர்ந்து நல்லூர் என்னுமிடத்தில் ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தினார். அது பெரும் போராட்டமாக முடிந்ததால் அங்கிருந்து வேறு இடத்திற்குக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

குடும்பத்துடன் இடம்பெயரவேண்டிய நிலை ஏற்பட்டது. எனவே 1845ல் பாளையங்கோட்டையில் குடியேறினார். அங்கு வாழ்ந்த காலத்தில் திருப்பாற்கடனாத கவிராயரிடம் தன் தம்பியாருடன் இணைந்து தமிழ் பயின்று கற்பவை கற்றுத் தேறினார்.

குடும்பப் பொறுப்பும் இறை சத்தியமும் இவரது மனதில் சமய சமரச நிலைக்கு வித்திட்டன. தான் கற்ற கல்வியறிவு தமிழ் கற்பிக்கும் அளவுக்கு அவருக்குப் போதிய அறிவைக் கொடுத்திருந்தது. எனவே தமிழ் ஆசிரியர் பணிக்காக முயன்றார். அந்தக் காலகட்டத்தில் திராவிட மொழிகளின் ஒப்பிலக்கண ஆய்வைச் செய்த பெருமைக்குரிய கால்டுவல் ஐயர் அங்கு பேராயராகப் பணிசெய்து வந்தார். இவரது தமிழ் அறிவைக் கணித்தறிந்த ஐயர் அவர்கள் தனது முகாமையில் இயங்கிவந்த சாயாபுரம் திருமறைக் கல்லூரியில் தமிழ் கற்பிக்கும் ஆசிரியர் பணிக்கு இவரைத் தேர்ந்தெடுத்தார். இவ்வாறு 1853ல் தமிழாசிரியரானார்.

தொடரும்...

**கனடாவிலிருந்து.....**

**கலாநிதி எழுத்துப் பூராடனார்**

# எதிரிக்குத் தூய்மை அன்பு...

*யாழ். ராதவல்லி*

இறைவா!
பகைமை உள்ள இடத்தில் அன்பைக் கட்டியெழுப்ப
வல்லமை தா!
எங்களுக்கு யாரெல்லாம் தீமை செய்கிறார்களோ
அவர்களை ஆசீர்வதி!
எங்கள் நெஞ்சத்திற்குப் பிடிக்காத நபர்களின் தேவைகளை
சந்தித்தருள்!
எங்கள் வாழ்வில் மறக்கமுடியாத வடுக்களை ஏற்படுத்தியோர்
வாழ்வு வளம்பெற உதவிசெய்!
எங்கள் உடல்களை வதைத்து ஊனமாக்க நினைக்கும் எதிரிக்கு
உடல் ஆரோக்கியத்தைக் கொடு!
எதிரிகளைத் தூற்றித் திரியாது அவர்களின் நல்ல பண்புகளை
எடுத்துச் சொல்லும் பக்குவத்தை எங்களுக்குத் தா
இறைவா!
வஞ்சம் தீர்க்கும் நெஞ்சம் வேண்டாம்
பழிவாங்கும் எண்ணம் சிறிதேனும் வேண்டாம்
அன்பு எம்மில் வளரட்டும்
உண்மை அன்பு வளரட்டும்
எதிரி என்று யாரை நினைக்கிறோமோ அவர்களிடம் தூய்மையான
அன்பு செலுத்த வரம் தா!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# அம்மா

தொலைபேசி சிணுங்கியது. லட்டுப் பிடிப்பதற்காக மாவைக் கிளறியபடி நின்ற விஜயா

"கொஞ்சம் றிசீவ் பண்ணுங்கோவனப்பா" என்று மகள் லாவண்யாவுடன் பலூன்களை ஊதிக்கொண்டிருந்த சுதனிடம் சொன்னாள். "கொஞ்சம் பொறு மகள் வாறன்" என்றபடியே றிசீவரை எடுத்தான்.


"வாழ்த்துகள் மிஸ்ர சுதன்... உங்கட வெடிங் அனிவஸறி டே.... பை த வே... இன்விரேசன் கிடச்சிது. மோணிங் வர ஏலாது. ஈவினிங் வாறம் என்ன" என்றது குரல்.

"பறவாயில்ல சேர்... ஈவினிங் அவசியம் வாங்க சேர்... அப்பிடியே டினரையும் எடுத்திற்றுப் போகலாம். மறக்காம மிஸசையும் கூட்டிற்று வாங்க சேர்..." குழைந்தான் சுதன்.

"ஸ்சுவர் ஸ்சுவர்... ஓகே பை.. பை..." என்றபடி றிசீவர் ஓய்ந்தது.

பல அழைப்புகள், வாழ்த்துகள்... 'கண்டிப்பா வந்திருவம், லஞ் பிரமாதமா இருக்கோணும் என்ன... ஐஸ்கிறீம், லட்டு, வடை, ஸ்பெசல் புறியாணி இதுகள் மட்டுமில்ல கொட்றிங்சும் றெடிபண்ணி வையடாப்பா' என்ற அன்புக் கட்டளைகள்.

கணவனும் மனைவியும் காலில் சக்கரம் பூட்டிக்கொண்டதுபோல் செயற்பட்டுக் கொண்டிருந்தனர். மகள் லாவன்யா ரொம் அன்ட் ஜெரி காட்டூனில் மூழ்கிக் கிடந்தாள். அவ்வப்போது எழுந்து டைனிங் டேபிளில் இருந்த ரின்னைத் திறந்து மிக்சர் ஒரு கோப்பையில் கொட்டிக்கொண்டுபோய் பக்கத்தில் வைத்துக்கொண்டு கிள்ளி வாயில் போட்டபடியே தன் பணியைத் தொடர்ந்தாள். அந்த வீட்டிற்கு இடப்புறமாக வீட்டுக் கூரையிலிருந்து சில கைமரத்துண்டுகளைப் பொருத்தி, ஒரு ஒத்தாப்பு இறக்கி, பக்கங்களில் பலகை மறைப்பும் உயரே கம்பி வலையும் அடித்திருந்தான் சுதன். பழைய பொருட்களை போட்டுவைக்க ஒரு ஸ்ரோர் றூமாக இருக்கும் என்ற எண்ணத்தில் அடித்த ஒத்தாப்பினுள் சாய்மானக் கதிரையில் அந்தத் தாய் கிடந்தாள். படுத்த படுக்கையாகிப்போன



பைந்தமிழ்க்குமரன் J.டேவிட்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# இலங்கையின் வரலாறு, புவியியல் பாடப் புத்தகங்களில் திருச்சபைக்கு எதிரான அவதூறுகள் - கொழும்புப் பேராயர்



இலங்கையின் இன்றைய மாணவர்களுக்கான வரலாறு மற்றும் புவியியல் பாடப் புத்தகங்கள் திருச்சபைக்கு எதிரான அவதூறான கருத்துகளைக் கொண்டுள்ளதாகக் குற்றம் சாட்டியுள்ளார் கொழும்பு பேராயர் மல்கம் ரஞ்சித். திருத்தந்தைக்கும் திருச்சபைக்கும் கத்தோலிக்கர்களுக்கும் எதிரான கருத்துகளை மாணவர்களின் பாடப்புத்தகத்தில் புகுத்துவது மதங்களிடையே மோதல்களை உருவாக்கும் முயற்சி என இலங்கையின் கல்வித் துறை அமைச்சர் பந்துல குணவர்த்தனவிடம் கூறிய பேராயர், ஒரு குழுவைக் கொண்டு இப்பாடப் புத்தகங்களை மறுபரிசீலனை செய்யவேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார்.

தாயைப் பராமரிக்க விஜயா அதைப் பயன்படுத்திக்கொண்டாள். காலையிலிருந்து வறண்ட இருமலும், மூச்சிழுப்புமாய் அந்தத் தாய் அவதிப்படுவதை இவர்கள் யாரும் கண்டுகொள்ளவேயில்லை.

"நாளைக்கி எங்கட வெடிங் அனிவஸரிம்மா... நிறைய விசிற்றஸ் வருவாங்க. பகல் சாப்பாடும் அரேஞ் பண்ணியிருக்கம். நாளைய ஒரு நாளைக்கி முக்கி முனகி சத்தம் போடாம பேசாம சமாளிச்சிக்கோம்மா... என்ன?" என்று விஜயா நேற்றே தாயிடம் சொல்லிவிட்டிருந்தாள்.

ஒரு கையும் காலும் பாரிச வாதத்தால் மரத்துப்போய் நா தடுமாறி படுத்துக் கிடந்த அந்தத் தாய் உள்ளத்தில்தான் எத்தனை தவிப்புகள்! நா வரண்டது... முடிந்தவரை தாகத்தை சகித்துப் பார்த்தாள்; முடியவில்லை.

"மகள்... மகள்.. பிள்ள...பிள்ள.. லாவன்யா... குடிக்கக் கொஞ்சம்.. தண்ணி....

# இலங்கையில் தண்டனைச் சட்டங்களைச் சீரமைக்க திருச்சபை அழைப்பு



சிறை சீர்திருத்தம் மற்றும் மறுவாழ்வுக்கான இலங்கை அமைச்சருடன் அண்மையில் பேச்சுவார்த்தைளை நடத்திய சிறைக் கைதிகளுக்கான கத்தோலிக்க அருட்பணி அவையின் அங்கத்தினர்கள், முன்னாள் தமிழ்ப் போராளிகள் மீதான விசாரணைகள், அவர்களுக்கான மதம் சார்ந்த திட்டங்கள், உளவியல் ஆலோசனைகள் மற்றும் நாட்டிலிருந்து மரணதண்டணையை முற்றிலுமாக ஒழித்தல் ஆகியவை பற்றி அவருடன் விவாதித்தனர். சிறைக் கைதிகளுக்கான தரமான உணவு, தியானத்தில் உதவும் திட்டங்கள், குறிப்பிட்ட மதம் என்று தனித்துப் பாராமல் மத ரீதியான ஆலோசனைகள், கல்வி மற்றும் வேலைவாய்ப்புப் பயிற்சிகள் போன்றவற்றுக்காகவும் அரசிடம் பரிந்துரைத்துள்ளனர் கத்தோலிக்கத் தலைவர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

தா…தாம்மா”

சீ என்ற வெறுப்புடன் தண்ணீர் போத்தலைக் கொண்டுபோய்

“இந்தாரிக்கி அம்மம்மா… அடிக்கடி கூப்பிட்டு என்னய கரச்சல் படுத்தாதீங்க. என்னவும் தேவையெண்டா அம்மாவையே கேளுங்க…” போய்விட்டாள் பேத்தி.

“ம்…..ம்…” நீண்ட பெருமூச்சு தாயிடமிருந்து வெளிப்பட்டது. சொற்ப நேரத்தில் சிறுநீர் கழிக்கவேண்டியவேதனை தொடங்கியது. பல் விளக்கவில்லை, முகம் கழுவவில்லை, காலைத் தேநீர்கூட இல்லை. அடி வயிறு நோ கூடியது.

“மகள்… விஜயா.. பிள்ள… மகள்… கொஞ்சம் வாம்மா… மகள்… விஜயா…”

இந்தக் குரலை அவளால் சகிக்க முடியவில்லை.

“கொஞ்சம் பொறுங்கம்மா. நேரம் பத்தரை பதினொண்டாகுது… இன்னும் ஒரு வேலயும் முடியல்ல…ச்சே… இஞ்சே.. டைனிங் டேபிள ரெடி பண்ணுங்கோ… அந்த செற்றி செற்றுக்குப் பக்கத்தில பாம்ஸ் ரீ பொட்ஸ் ரெண்டத் தூக்கி வையுங்கோ… ச்சே என்னதான் செய்றீங்களோ தெரியல்ல… மகள் லாவன்யா குளிச்சு ரெடியாகு பிள்ள…” என்றாள் குசினியிலிருந்தபடியே.

“மகள்… மகள்.. பிள்ள லாவன்யா… கொஞ்சம் வாறியா மகள்… நான் கொஞ்சம்..பாத்…”

“ச்சே… இதென்னம்மா இண்டைக்கெண்டு இந்த மனிசி கூப்பாடு போடுது… அம்மம்மா என்னயக் கூப்பிட வேணாம். நான் குளிச்சி வெளிக்கிடப் போறன்” என்றபடியே துள்ளிக் குதித்து துவாயுடன் குளியலறைக்குள் நுழைந்துவிட்டாள் லாவன்யா. விருந்தினர்கள் வரத் தொடங்கிவிட்டனர். வீடே களை கட்டிவிட்டது. உயர்ந்த ரக ஓடியோ பிளேயர் காது கிழியப் பாடத் தொடங்கிவிட்டிருந்தது.

சிரிப்புகள், கை குலுக்கல்கள், கண்சாடைகள், கேலிகள், கிண்டல்கள் தொடர்ந்தன.

“என்னடி விஜயா இன்னமும் சும்மா திரிஷா மாதிரி ஸ்லிம்மா இருக்கா… அதுக்குள்ள அனிவஸரியா..?” என்றாள் விது.

“சீ… போடி..” என்று சிரித்த விஜயாவை

“ஆவுறா அண்டைக்கி ஃபெஸ்ட் நைட் இண்டைக்கி அன்னிவஸரி நைட்டாடி…” என்று வம்புக்கிழுத்தாள் மாலா. மறுபுறம் உற்சாக பானங்களும், சோடாப் போத்தல்களும், டேஸ்ட் தட்டுகளும், புகைப்பான்களுமாய் தன் நண்பர்களுடன் கலந்திருந்தான் சுதன். லாவன்யா தன் வயதுத்



## நுகர்வுக் கலாசாரத்தின் பொய்யான விழுமியங்கள் பற்றி இளைஞர்களுக்குத் திருத்தந்தை அறிவுரை

இன்றைய உலகம் பொருளாதாரப் பிரச்சினைகளை மட்டும் சந்திக்கவில்லை மாறாக, பொய்யான மதிப்பீடுகளை உருவாக்கும் நுகர்வுக் கலாசாரத்தாலும் அச்சுறுத்தப்பட்டுள்ளது என இத்தாலியின் சுல்மோனா நகரின் இளைஞர்களைச் சந்தித்தபோது திருத்தந்தை கூறினார். இன்றைய இளைஞர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் வருங்காலத்தைக் குறித்த அவர்களின் நம்பிக்கைகளைப் பாதிப்பவைகளாக உள்ளன என்ற கவலையையும் தெரிவித்த திருத்தந்தை, வாழ்வை நிறைவாக்குவதாக வாக்களிக்கும் பொய்யான மதிப்பீடுகள் வாழ்வை வெற்றிடமாக வைத்திருக்கவே உதவுகின்றன எனவும் கூறினார். நுகர்வுக் கலாசாரம் என்பது இன்றைய தேவைகளுக்கு மனிதனை அடிமையாக்கி, கடந்தகால வரலாற்றை மறக்கவைத்து, வருங்காலத்தைக் கட்டியெழுப்புவதற்கான அவனின் திறமையைப் பறிப்பதாகவுள்ளது என்ற கவலையையும் திருத்தந்தை வெளியிட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# விடிவைத் தேடியே

அருட்பணி N.C.அருள்வரதன்

வெறிகொண்ட காலத்தின்
வேதனைகள் பலநூறு
கண்களை மூடி நின்றால்
காட்சிகளாய் வந்து நிற்கும்
இன்னல்கள் அகலாமலென்றும்
இமயமாய் உயர்ந்து நின்று
கண்களில் கரையும் நீர்கள்
கறைகளையே தொடர்ந்து சொல்லும்

மானங்கள் இழந்துபோக
மதிப்பிழந்த நிலைகள் சேர்ந்து
காலத்தின் துயர் வடுக்கள்
கறையாகப் பழந்துகொள்ள
ஊனங்களான உடல்கள்
வேதனையின் விதைகளவை
விழுந்து பல விருட்சமாகி
கண்ணீரின் துயர்களையே
கவலைகளாய்ப் பூத்து நிற்கும்

கோபுரமாய்க் கொலுவிருந்த
வாழ்வுகளோ இன்றுமுள்
வேலிக்குள் முடங்கிவிட்ட
வேரறுந்த நிலைகளோடு
பொய்களையே கேட்டுக் கேட்டு
புளித்துவிட்ட காதுகளாய்
ஒன்றுமே இல்லாமல்
ஒட்டிவிட்ட வயிறுகள்
விடியுமா இந்த நிலை
முடியாத பெருமூச்சாய்
காலமே கண்திறக்க
கடவுளையே வேண்டுவோமே

தோழியர்களுடன் கவுண்டமணி ஜோக் சொல்லி கும்மாளமடித்துக்கொண்டிருந்தாள்.

கதவு பூட்டப்பட்டிருந்த அந்த வீட்டுத் தகரக் கொட்டிலுக்குள் அந்தத் தாய் எழ முயன்று, சாய்மானக் கதிரை புரண்டு தலையடிபட விழுந்து, கிடந்த கிடையிலேயே மலசலம் போய் மூச்சிரைத்தபடியே

"மகள்... மகள்... விஜயா... பிள்ள.. லாவண்யா... லாவண்யா.. மகள்.. வி..விஜயா..."

என்று பல மணி நேரமாகக் கூப்பிட்டாள். யார் காதிலும் விழவில்லை. அனுகல், முனகல் மெல்ல மெல்ல ஓய்ந்து போனது.

மதியச் சாப்பாடு முடிந்து, அன்பளிப்புகள் வழங்கி ஒவ்வொருவராக விடை பெற்றனர். பிற்பகல் மூன்று மணியளவில் விஜயாவிற்கு தாயின் ஞாபகம். லேசான படபடப்புடன் சென்று கதவைத் திறந்தாள். ஏக்கம் நிறைந்த ஒரு பார்வையுடன் அந்தத் தாய் அமைதியடைந்திருந்தாள். "அம்...மா" என்று கதற வாயெடுத்தபோது அந்த வார்த்தையே அவள் தொண்டையில் சிக்கிக்கொண்டது. ●

## அல்கட்ராஸ்



அல்கட்ராஸ் மிகப் பெரிய கடற்பறவை. பன்னிரண்டு அடிவரை சிறகுகள் விரியும். சிறகடித்து வானத்தில் குறிப்பிட்ட உயரத்திற்குப் போய்விட்ட பிறகு சுகமாக இரண்டு இறக்கைகளையும் விரித்து வைத்துக்கொண்டு அவற்றை அசைக்காமலே மைல் கணக்கில் பறக்கும் சக்தி கொண்டவை இந்த அல்கட்ராஸ்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media






*மட்டக்களப்பு சத்துருக்கொண்டானில் அமைந்துள்ள 'மனோ வளர்ச்சி குன்றிய சிறுவர்களுக்கான ஓசானம் நிலையம்' அமைக்கப்பட்டு 25 வருடங்கள் ஆகின்றன. இதனையொட்டி இச்சிறப்புச் செவ்வி இடம்பெறுகிறது. இம்முறை தொண்டனின் சில நிமிடங்களுக்காக எம்மோடு இணைந்துகொள்பவர் இந்த நிலையத்தின் மேலாளர் திருக்குடும்பக் கன்னியர்சபை அருட்சகோதரி றெஜினா சந்தியாப்பிள்ளை அவர்கள்.*

**வணக்கம் அருட்சகோதரி அவர்களே!**

❊ வணக்கம்!

**அருட்சகோதரி அவர்களே தாங்களும் தங்கள் திருக்குடும்பக் கன்னியர்களும் பணிபுரியும் 'ஓசானம் இல்லம்' பற்றியும் அதன் ஆரம்பம் பற்றியும் சிறிது சொல்ல முடியுமா?**

❊ ஆம்! மட்டக்களப்பிற்கு வடக்கே திருமலை வீதியில் சுமார் 5 கிலோமீற்றர் தூரத்தில் உள்ள சத்துருக்கொண்டான் என்னும் கிராமத்தில் அமைந்துள்ள மனோவளர்ச்சி குன்றிய பிள்ளைகளுக்கான ஒரு நிலையம்தான் 'ஓசானம் இல்லம்' மட்டக்களப்பு பிராந்திய வின்சன் டி போல் சபையினரின் அரும்பெரும் முயற்சியால்தான் இந்த நிலையம் அமைக்கப்பட்டது. இதனை நடாத்தும் பொறுப்பு திருக்குடும்ப கன்னியர் சபையினரான எம்மிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

**இந்நிலையம் எப்போது ஆரம்பிக்கப்பட்டது?**

❊ மட்டக்களப்பு பிராந்திய வின்சன் டி போல் சபையினரின் கோரிக்கையை அடுத்து அப்போதைய திருமலை-மட்டுநகர் மறைமாவட்ட ஆயர் மேதகு எல்.ஆர்.அன்ரனி ஆண்டகையின் அனுமதியுடன் 18.02.1981ல் அடிக்கல் நாட்டப்பட்டது. இதற்கு முன்னின்று உழைத்தவர் புனித வின்சன் டி போல் சபையின் தலைவர் அமரர் நோபட் றாகல் என்றால் அது மிகையாகாது. அவரின் மறைவையடுத்து அமரர் கே.எல்.இராஜேந்திரம் இப்பணியில் ஈடுபட்டார். கட்டிட வேலையின் ஒரு பகுதி முடிவுற்றதும் எமது ஆயர் அருட்கலாநிதி யோசப் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகையின் தலைமையில் அப்போதைய திருக்குடும்பக் கன்னியர் சபையின் தேசியத் தலைவி அருட்சகோதரி மேரிசிலேவன் அவர்களும், மாகாணத்தலைவி அருட்சகோதரி காமலிற்றா அவர்களும் வின்சன் டி போல் சபை உறுப்பினர்களும் பிரசன்னமாகவிருக்க இவ்வில்லம் 17.03.1986ல் திறந்துவைக்கப்பட்டது.

**இதுவரை யார் யார் இந்நிலையத்தின் மேலாளர்களாக இருந்துள்ளார்கள்?**

❊ 1986ம் ஆண்டிலிருந்து அருட்சகோதரி பற்றீசியா யோசப் அவர்கள் பொறுப்பாக இருந்தார்கள். அவர் மனவளர்ச்சி குன்றிய பிள்ளைகள் தொடர்பான விசேட பயிற்சி பெற்றவர். அதன் பின்னர் 1993 தொடக்கம் 2004ம் ஆண்டு டிசம்பர் வரை அருட்சகோதரி ஸ்ரெபனி அவர்கள் பொறுப்பாளராக இருந்தார்கள். அதன்பின்னர் நான் பொறுப்பேற்றுக்கொண்டேன்.

**இந்நிலையத்தைத் திருக்குடும்பக் கன்னியர்கள் வழிநடத்த முன்வந்தமைக்கான காரணம் என்ன?**

❊ யாழ்ப்பாணம் உடுவில் என்னும் இடத்தில் இதுபோன்ற நிலையம் ஒன்றினை எமது சபையினர் நடாத்தி வருகின்றனர். அத்துடன் எமது ஆயர் அவர்களின் வேண்டுகோளும் இதற்குக் காரணமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

**இங்குள்ள பிள்ளைகள் பற்றிக் கூறமுடியுமா?**

❊ இங்கு விசேட தேவையுள்ள பிள்ளைகள் 38 பேர் உள்ளனர். இவர்களில் 15 வயதிற்கு மேற்பட்ட பெண்கள் 13 பேர் உள்ளனர். இவர்கள் வேறுபடுத்தி வைக்கப்பட்டு அவர்களுக்கு தொழிற் பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. அவர்களின் உற்பத்திகள் விற்பனை செய்யப்பட்டுப் பெறப்படும் பணம் அவர்களின் வங்கிக் கணக்குகளில் வைக்கப்படுகின்றன. அவர்களை பனையோலை வேலைகள், பிரம்புக் கூடை வேலைகள், கோழிப் பண்ணை போன்றவற்றை மேற்கொள்கிறார்கள்.

இதில் இன்னொரு முக்கிய விடயம் என்னவென்றால் தங்கள் உணவுகளைத் தாங்களே சமைத்துச் சாப்பிடப் பழகியுள்ளார்கள். அவர்கட்கு ஓர் உதவியாளரும் உள்ளார். இப்பிள்ளைகளில் 30 வயது, 40 வயது, 46 வயதுப் பிள்ளைகளும் உள்ளடங்குவர். அவர்கள் மனோவளர்ச்சி குறைந்தவர்கள் என்பதால் பிள்ளைகள் என்று அழைப்பது பொருத்தமாய் இருக்கும் என் எண்ணுகிறேன்.

**ஏனைய 15 வயதிற்குட்பட்ட பிள்ளைகள் பற்றி என்ன சொல்கிறீர்கள்?**

❊ அவர்கள் ஆண், பெண் என 25 பேர் உள்ளனர். அவர்கள் காலை 5.30 மணிக்கு எழும்புவார்கள். சிலர் எம்மையும் 5 மணிக்கே தட்டி எழுப்புவார்கள். அவர்களுக்கு மலசலகூடப் பயிற்சிகள் வழங்குகின்றோம். அது மிகவும் கஷ்டமான வேலைதான். உடற்பயிற்சி செய்வார்கள். காலைச் சாப்பாட்டின் பின் 9 தொடக்கம் 12 மணிவரை இங்குள்ள பாடசாலைக்குச் செல்வார்கள். வயதுப்படி ஐந்து குழுக்களாகப் பிரித்துள்ளோம்.

ஒரு குழுவினர் எழுத்துப் பழகுவர். ஏனையவர்களுக்கு பேசுவதற்கான சிகிச்சை, இயன்மருத்துவப் பயிற்சி என்பன வழங்கப்படும். இங்கு என்ன சிக்கல் என்றால் வகுப்பறைகள் இல்லை, ஒரே சிறு மண்டப அறைக்குள்தான் எல்லா வகுப்புகளும் நடைபெறுகின்றன.

நான்கு ஆசிரியர்களும் ஒரு அருட்சகோதரியும் இவர்கட்குப் போதிக்கின்றனர். மிகவும் சொற்ப சம்பளத்தில்தான் இவர்கள் பணியாற்றுகின்றனர். நண்பகல் 12.00 மணிக்கு யோகாசனம் பயில்வர். 12.30 மணிக்கு உணவு எடுப்பர். பின்னர் 12.30 - 1.30 ஒரு மணித்தியால ஓய்வு எடுத்தபின்னர் பிற்பகல் 3.30 வரை கைவேலை பழகுவார்கள். கடதாசி மாலை கட்டுதல், களிமண்ணில் உருக்கள் செய்தல் போன்ற கைப்பணி வேலைகள் அவை. பின்னேரம் 4.00 மணிக்குத் தேனீர் இடைவேளை. 4.00 மணி தொடக்கம் 5.00 மணிவரை தோட்டவேலை செய்வார்கள். இரவு



## நற்செய்தி அறிவித்தல் கிறிஸ்தவ சமூகத்திற்கும் மனித குலமனைத்திற்கும் செய்யும் சேவை - திருத்தந்தை

இன்றைய உலகில் அச்சத்தாலும் மனச் சுமைகளாலும் ஒடுங்கிப் போயிருக்கும் மக்களுக்கு இறைவனின் நற்செய்தியை எடுத்துச் செல்வது என்பது கிறிஸ்தவ சமூகத்திற்கும் மனித குலமனைத்திற்கும் செய்யும் பெரும் சேவையாகும் என்றார் திருத்தந்தை 16ம் பெனடிக்ட். இயேசுவை அறியாதவர்களுக்கு மட்டுமல்ல ஏற்கனவே நற்செய்தி அறிவிக்கப்பட்டுள்ள நாடுகளுக்கும் மீண்டும் நற்செய்தி அறிவிக்கப்பட வேண்டிய தேவை உள்ளது என்ற திருத்தந்தை, பழைய அடித்தளத்தில் வளர்ந்து நிற்கும் திருச்சபை, இறைவனை விட்டு விலகிச் சென்று வளர்ச்சியை நாடும் சமூகத்திடையே செல்லவேண்டியிருப்பதால் புதிய நற்செய்தி அறிவித்தல் என்பது இன்றியமையாததாகின்றது என மேலும் வலியுறுத்தினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

6.30 மணிக்கு செப வழிபாடு, பின்னர் 6.45 மணிக்கு சாப்பிட்டுவிட்டுப் படுக்கைக்குப் போவார்கள்.

**இவர்களை வெளியில் அனுப்புவதுண்டா?**

❊ 1ம் தவணையில் சுற்றுலா கூட்டிச் செல்வோம். தவணை விடுமுறையில் வீடுகளுக்கு அனுப்புவோம். 2ம் தவணையில் இல்ல விளையாட்டுப்போட்டி வைப்போம். 3ம் தவணையில் ஒளிவிழா நடக்கும். 1 மாத தவணை விடுமுறை விடுகின்றோம். இவ்விடுமுறை முடிந்து மீண்டும் வரும் பிள்ளைகள் முன்னர் கற்ற சில விடயங்களை மறந்துவிடுவதால் மீண்டும் அவற்றைப் பழக்கவேண்டியுள்ளது. குறிப்பாக மலசலகூடப் பழக்கவழக்கம்.

**இவர்களில் வகைப்படுத்தல் உண்டா?**

❊ ஆம், இவர்களை அவர்களின் நடத்தைகள், உடலமைப்புகள் பற்றி மூன்று வகையாகப் பிரிக்கலாம்.

01. Mild
02. Dawn Sintrom
03. Autism

இவர்களில் இரண்டாம் வகையினர் சொல்லிக் கொடுப்பதனை இலகுவாகப் பிடிப்பார்கள்.

**இவர்கள் எவ்வளவு காலம் உங்கள் பொறுப்பில் இருப்பார்கள்?**

❊ 5 வயதில் இவர்களைப் பொறுப்பேற்க நாம் தயாராக உள்ளோம். முன்பு சொன்னதுபோல் வயது கூடியவர்களும் உள்ளார்கள். பெற்றோர்கள் அவர்களைக் கூட்டிச் செல்லத் தயங்குகிறார்கள். ஒரு பெண் பெற்றோர்களின் விருப்பின் பேரில் திருமணம் செய்துகொண்டு குழந்தைக்கும் தாயாகவுள்ளாள். அவள் பெற்றோரிடம் உள்ளாள். இவ்வாறானவர்கட்குப் பிறக்கும் பிள்ளைகளும் குறைபாடானவர்களாகப் பிறக்கும் சாத்தியம் அதிகம்.

**இவர்களைத் தவிர வேறு பிள்ளைகளும் உள்ளனவா?**

❊ ஆம்! பெற்றோரை இழந்த 17 பேர் உள்ளனர். அவர்கள் பாடசாலை செல்கின்றனர். மற்றும் நீதிமன்றம் அனுப்பும் சில பிள்ளைகளும் உள்ளனர்.

**இதை நடத்துவதற்கான நிதியீட்டத்தை எவ்வாறு பெறுகின்றீர்கள்?**

❊ பரோபகாரிகளின் உதவியுடன்தான் இந்நிலையம் நடைபெறுகின்றது. குறிப்பாக சின்ன உப்போடையைச் சேர்ந்த சகாயம் பிரான்சிஸ் என்பவர் மாதம் பிறந்தவுடன் சேகரித்த பணத்துடன் வந்து நிற்பார். இவற்றைத் தவிர பள்ளி மாணவர்கட்கான செலவின் ஒரு பகுதியை 'எகெட்' நிறுவனம் பொறுப்பெடுத்துள்ளது. சமூக சேவைத் திணைக்களம் சிறு தொகையை வருடாந்தம் தரும்.

அரிசி முடிந்துவிட்டது என்று இருந்தால் மறுநாள் யாரையாவது அரிசியுடன் ஆண்டவர் அனுப்பிவைப்பார்.

**இறுதியாக வாசகர்கட்கு என்ன சொல்ல விரும்புகிறீர்கள்?**

❊ மனோவளர்ச்சி குன்றியவர்களும் எமது அங்கம் என்று நாம் எண்ணவேண்டும். அவர்களை சமூகம் ஏற்றுக்கொள்ளவேண்டும். பெற்றோர்கள் அவர்கள் மட்டில் மிகுந்த கரிசனை கொள்ளவேண்டும்.

மட்டக்களப்பு மாவட்டத்திலும் 'உட்புகுத்தல் கல்வி' நடைமுறைப்படுத்தப்படல் வேண்டும்.

இவற்றுக்கு மேலாக 'ஓசானம் இல்லத்திற்கு' உதவும் பரோபகாரிகளின் எண்ணிக்கை அதிகரிக்கவேண்டும்.

*'கடவுளின் குழந்தைகள்' வாழும் இல்லமொன்றைத் தரிசித்த திருப்தியுடன் நாம் விடைபெற்றுக்கொண்டோம்.*

**- ஆழியோன் -**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# காலநிலை மாற்றமும் புவி வெப்பமடைதலும்

இலங்கையில் திடீர்க் காலநிலை மாற்றங்கள் பற்றி நீங்கள் அறிந்திருப்பீர்கள். மழை பெய்யவேண்டிய நேரத்தில் வெயிலும், வெயில் சுடும் வேளையில் மழையும் என்று நேர்மாறாக இயங்குவதுதான் காலநிலை மாற்றம். இத்திடீர்க் காலநிலை மாற்றத்தினால் கால நிலையை மையமாகக் கொண்டு வேலை செய்யும் தளங்கள் பெரிதாகப் பாதிக்கப்பட்டுள்ளன. இவற்றை சில விஞ்ஞான ஆய்வுகளைப் படிப்பதன் மூலம் அறிந்துகொள்ள முடியும்.

காலநிலை மாற்றமானது பல்வேறு காரணங்களினால் நடைபெறுகிறது. அதாவது கைத்தொழில் மயமாக்கம், பெருமளவு எரிபொருள் பாவனை, செயற்கை - இயற்கைக் கழிவுகளின் அளவு அதிகரிப்பு, எல்லையற்ற காடழிப்பு, கைத்தொழில் மயமாக்கல் போன்றவை. தற்போது நவீனத்துவம் வளர்ந்துகொண்டு செல்கின்றமையால் கைத்தொழிலும் நாளுக்கு நாள் முன்னேறிக்கொண்டே செல்லுகின்றது.



அதாவது மரக்கைத்தொழில், பாய்க் கைத்தொழில், சுண்ணாம்புக் கைத்தொழில் போன்ற பல்லாயிரம் கைத்தொழில்களினால் சூழல் மாசுபட்டு, வளிமண்டலம் அசுத்தமடைந்து பூகோளமானது வெப்பமடைகின்றது. இதனாலேயே காலநிலை மாற்றங்கள் ஏற்படுகின்றன. பெருமளவு எரிபொருட் பாவனை - தற்போது காலம் முன்னேறிச் செல்கின்றதால் உலகில் வாகனங்களின் எண்ணிக்கையும் அதிகரித்துச் செல்கின்றன - வாகனங்கள் அதிகளவாகப் புகையை வெளிவிடும்போது அவை வளிமண்டலத்துடன் கலந்து ஓசோன் படையை மிகவும் பாதிப்புக்குள்ளாக்குகின்றன.

அடுத்து, செயற்கை, இயற்கைக் கழிவுகளின் அதிகரிப்பு. தற்போது உலகமயமாக்கலில் தொழிற்சாலைகள் கட்டிட ரீதியாகப் பாரிய வளர்ச்சியடைகின்றன. இதனால் அதிலிருந்து வெளியேறும் கழிவுகளின் அளவும் அதிகரித்துச் செல்லுகின்றது. இவை உக்கிப் போகாமல் அதிலிருந்து வெளியேறும் அசுத்த வாயுக்கள் ($Co_2$), சாம்பல், தூசி, பாரமான உலோகத் துணிக்கைகள், அஸ்பஸ்டர்ஸ் போன்றவையும், திரவக் கழிவுத் துணிக்கைகளான ரச ஆவி, கார்போனிக் துணிக்கைகள் போன்றவையும் செயற்கைக் கழிவுகளாகும்.

மேலும், இயற்கைக் கழிவுகளுக்குத் தீ மூட்டுவதால் அது எரிந்து வெளியேறும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

வாயுக்களும் ஓசோன் படையைத் தாக்கும். மேலும் எல்லையற்ற காடழிப்பினால் மழை வீழ்ச்சி பூமியில் குறைவடைகின்றது. இதனால் நீரில்லாத காலநிலை உண்டாகின்றது. இதனாலே வெப்பம் அதிகரிக்கின்றது. இவ்வாறு வளிமண்டலமும் பாதிக்கப்படுகின்றது.

வளிமண்டலத்தில் சேரும் பின்வரும் கூறுகள் எப்படியானவை எனப் பார்ப்போம்.

காபனின் ஒக்சைட்டுகள்: இவ்வாயுவானது அனல் மின்னுற்பத்தி, சுவட்டு எரிபொருட்களில் இருந்து தோற்றுவிக்கப்படுகின்றது. ஐதரோ காபன்களும் அலசனேற்றப்பட்ட ஐதரோ காபன்களும் காபன், ஐதரசன் மூலங்கள், ஐதரோ காபன் சேர்வைகளாக உருவாகும். பெற்றோலிய வாயுக்கள், பெற்றோல், டீசல் என்பவை எரிக்கப்படுவதன் காரணமாக அவை வளிமண்டலத்தை அடைதல் மூலமாக பூமி வெப்பமடைகிறது. வளிமண்ணடலத்தில் சில வாயுக்களின் செறிவு அதிகரிப்பதன் காரணமாக வெப்பநிலை அதிகரிக்கின்றது.



சூரியனிலிருந்து புவியை நோக்கி வரும் ஆபத்தான UV (Ultra Violet) கதிர்கள் ஓசோன் தூவாரத்தினூடாகப் புவியைச் சேர்வதனால் புவியில் வாழும் மனிதர்களின் தோலில் புற்றுநோய், தோல் அலர்ஜி போன்ற தோல் வியாதிகள் ஏற்படுகின்றன. இவ்வாறு இக்காலநிலை மாற்றமும் புவி வெப்பமடைதலும் (Global Warming) ஏனைய நாடுகளில் காணப்பட்டாலும் தற்போது கூறப்பட்ட பாதிப்புகளினால் இலங்கையும் இதற்கு ஆளாகியுள்ளது. இதனாலேதான் ஒக்டோபர் 10ம் திகதி 'உலக புவி வெப்பமடைதலும் காலநிலை மாற்றமும்' தினமாகப் பிரகடனம் செய்யப்பட்டு அது முதன் முதலாக இலங்கையில் இவ்வருடம் (2010) தேசிய ரீதியில் கொண்டாடப்படுகின்றது. எனவே, இத்தினத்தின் நோக்கம் சூழல் பாதிப்புக் காரணிகளைத் தடுப்பதாகும். அவ்வாறே நாமும் சூழல் பாதிப்புகளிலிருந்து நாட்டையும் வளத்தையும் பாதுகாப்போம்.

**- J. L. ஜெரோசன் -**



## குறும்(புப்)பா - 47

முழுவயிறும் முட்டச் சுவையுணவு
முண்டுவது எப்போதும் தவறு
எழுபோதும் அரைவயிறு நீர்பாதி கால்வெறுமை
நெருங்காது நோயென் றறி

~ மலர் ~



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

அப்போதுதான் பூமியின் சுகந்தத்தை ஸ்பரிசித்த ஒரு குழந்தையின் மென்மையான, மெதுவான செந்நிறக் கைகள் போன்ற துளிர்கள் நீண்டும் சற்று உருண்டையுமான சிறிய மஞ்சள் வண்ணப் பழங்கள், சங்க காலப் பாண்டிய மன்னரின் மார்பில் சரமாகத் திகழ்ந்த வெண்ணிறப் பூக்கள் அந்த வேப்ப மரத்திற்கு மேலதிக அழகையும் பெருமையையும் அள்ளித் தருகின்றன.

உடையாரின் வீட்டு வளவின் முன் பிரதான வீதியை அண்டினாற்போல அசாதாரண கம்பீரத்தோடு நீண்ட காலமாக நிழல் வழிய நிற்கும் அந்த வேப்பமரத்தில் கொத்துக் கொத்தாகத் தூங்கும் பழங்களை குருவிகள், கிளிகள் மட்டுமின்றி அங்கு விளையாட வரும் குழந்தைகளும் ருசி பார்க்கின்றனர். கசப்பும் இனிப்பும் கலந்த அந்தச் சுவை எத்தகைய பேதமுமின்றி சின்னஞ் சிறுசுகளின் வாயில் அமுதமாகின்றது.

சிறியதும் மஞ்சள் நிறமானதுமான மின்குமிழ்கள் போல் தூங்கும் பழங்களால் அலங்கரிக்கப்பட்ட அந்த வேப்பமரம் ஒரு பெரும் போட்டியின் களமாகவே ஆகிறது. பறவைகளுக்கிடையில் நடைபெறும் அந்தப் போட்டியில் அவை காட்டும் வேகம், எழுப்பும் ஒலி மரத்தை மட்டுமா அந்தப் பிரதேசம் முழுவதையுமே அதிரவைக்கிறது.

ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாகத் தான் பிறந்து வளர்ந்த ஊருக்கும் அதன் அயல் கிராமங்களுக்கும் ஒரு சிற்றரசனாகவே விளங்கும் பேதுருப்பிள்ளை உடையார் பறவைகள் நடத்தும் அந்தப் பகிரங்கப் போட்டியைத் தனக்குள் இரசித்தவராக அங்கே வந்து அமர்ந்திருக்கின்றார். தனது வாழ்க்கையில்

# அன்ன யாவினும் புண்ணியம் கோடி....

**- வாகரைவாணன்**



**வரலாறு தழுவிய சிறுகதை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

இடம்பெற்ற எத்தனையோ போட்டிகளில் வெற்றிகண்ட உடையாருக்குப் பறவைகளின் இந்த போட்டி சிரிப்பைத் தருகின்றது.

இடுப்பில் எட்டுமுழ மல் வேட்டியும், தோளில் கரை போட்ட ஒரு வெள்ளைநிறச் சால்வையுமாகக் கடுக்கண்கள் அலங்கரிக்க, தங்கப் பிறேம் போட்ட மூக்குக் கண்ணாடி முகத்துக்கு ஒரு தனி வசீகரத்தைத் தர, தனது முழங்கால்கள் இரண்டையும் இரண்டு கைகளால் வளைத்துப் பிடித்தபடி வெறுந்தரையில் அமர்ந்திருக்கும் உடையாரிடம் வயதானாலும் அவரது அந்தஸ்துக்குரிய மிடுக்கு அப்படியே இருக்கிறது.




மருந்து மரம் என்று உடையாரால் அடிக்கடி வர்ணிக்கப்படும் அந்த வேப்பமரத்தின் கிளையில் ஊஞ்சல் கட்டி ஆடும் காற்றின் சுகம் வயதான தனது உடலுக்கு ஒளடதமாக இருக்கும் என்ற எண்ணத்தினாலும் அதன் குளிர்ந்த நிழலில் 'தட்டுக்கோடு', 'பிள்ளையார் கட்டை' விளையாட வரும் தனது பேரப் பிள்ளைகளோடு கதைத்து மகிழவும் அது ஒரு வாய்ப்பாக அமையும் என்பதாலும் அங்கு வந்து தரிசனம் தரும் உடையாரிடம் அண்மைக் காலமாக பதினைந்து இருபது பக்கங்களைக் கொண்ட ஒரு சிறு புத்தகம் தொத்திக் கொள்கிறது.

அடுத்தடுத்து அரச உத்தியோகங்கள் பலவற்றை அனுபவிக்கும் பேறு பெற்ற உடையார் அவரது மைத்துனர் கணபதிப்பிள்ளை வாத்தியார் போல பெரிய படிப்பாளி அல்ல என்றாலும், தனது தந்தையார் போன்று அவ்வப்போது வாகடங்களை எடுத்துப் படிக்கும் பழக்கமுடைய அவருக்கு அக்காலத்தில் அபூர்வமாக வெளிவரும் புத்தகங்களும் நல்ல விருந்தாக அமையும்.

உடையார் பல ஏக்கர் தென்னந்தோட்டங்களின் உரிமையாளர். மூன்று மாதத்திற்கு ஒரு தடவை அந்தத் தோப்புகளில் இருந்து ஆயப்படும் பல்லாயிரக்கணக்கான தேங்காய்களை தமிழ்நாடு தூத்துக்குடியில் இருந்து வரும் 'வாடா' எனும் கப்பல் வாகரை முகத்துவாரத்தில் தரித்து நின்று ஏற்றும்போது அங்கும் எழும் 'கொள்வோர் ஓதையும் கொடுப்போர் ஓதையும்' வாகரை ஊரை ஒரு பூம்புகாராகவே காட்டி நிற்கும்.

தனது பரம்பரையினர் போன்று உடையார் தமிழ் நாட்டோடு வைத்திருந்த இந்த வாணிப உறவு, அவருக்களித்த அன்பளிப்புகளில் அந்தச் சிறிய புத்தகமும் ஒன்று. புத்தகம் சிறிது எனினும் அதில் பொதிந்துள்ள கருத்துகளால் பிரமித்துப்போன உடையார் அதனை ஒரு பொக்கிஷமாகவே பேணலானார்.

வசன நூல்களையே பெரும்பாலும் வாசித்துப் பழக்கப்பட்ட உடையாருக்குப் பல ஆண்டுகளுக்கு முன்பு தமிழ்நாட்டில் அச்சிடப்பட்ட அந்தக் கவிதை நூலைப் பார்த்ததும் ஆரம்பத்தில் ஒரு மாதிரியாகத்தான் இருந்தது. ஆனாலும் எளிய இனிய தமிழில் பிறவிக் கவிஞன் ஒருவனால் படைக்கப்பட்ட அந்த நவ கவிதைளைப் படித்த உடையார் அவற்றால் பெரிதும் ஈர்க்கப்பட்டார். அதிலும் 'சரஸ்வதி தேவியின் புகழ்' எனும் தலைப்பில் பாடப்பட்ட அக்கவிதைகள் அவரை மீண்டும் மீண்டும் வாசிக்கத் தூண்டியதோடு கவிதையென்றால் என்னவென்று தெரியாத உடையாருக்கு அதுதான் கவிதை என்ற உணர்வையும் ஊட்டின.

கவிதையின் சொல்லழகு, ஓசையின்பம் மட்டுமின்றி அந்த நெடுங் கவிதையில் ஒன்பதாவதாக உள்ள 'இன்னறுங்கனிச் சோலைகள் செய்தல்' என்னும் கவிதையில் பொதிந்துள்ள கருத்துகள் அவரைப் பலமாகச் சிந்திக்கவும் வைக்கின்றன.

உண்மைதான். தான் சார்ந்த சமயத்தின் வளர்ச்சிக்காகத் தனது மண்ணில் ஓர் ஆலயத்தை அமைத்த உடையார் அங்கு படிக்க விரும்பியும், பாடசாலை ஒன்றில்லாததால் ஆற்றில் "களக்கம்பு" போட்டு மீன் பிடித்தும், சோழன் சேனைப் பரண்களில் ஏறியிருந்து கிளி, குருவி ஓச்சியும் தங்கள் பாடசாலைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## பழைய ஓவியம்



CHAUVUT குகை ஓவியங்கள்தான் மிக்ப பழமையானவை. 1994ல் பிரான்சில் தொங்கு பாறைகளின் உயரத்தில் சிவப்பில் வரைந்த ஓவியங்கள் இருப்பதைத் தற்செயலாகப் பார்த்து அவற்றை ஆராய்ந்து புராதன மதிப்பைக் கண்டறிந்தார்கள். கிட்டத்தட்ட இருபதாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே மனிதன் ஓவியம் வரையத் துவங்கியிருக்கிறான். பிரான்ஸ் மற்றும் ஸ்பெயின் நாட்டுக் குகைகளில் கற்கால ஓவியங்களைப் பார்க்க முடிகிறது. குறிப்பாக அம்புகளால் துளைக்கப்பட்ட காட்டெருமையின் ஓவியம்.

காலத்தை வீணாக்கிய பிள்ளைகளுக்கு அவர் எதுவும் செய்யாதது பெரும் ஆச்சரியந்தான்.

ஆலயம் எழுப்பி, ஆண்டுதோறும் தடபுடலாக விழா நடத்தி, அன்னதானம் அளித்து திருப்தியடைந்த உடையாரின் மனத்தில் ஒரு கிராமத்தில் ஆலயங்கள் எழுப்புவதைவிட பாடசாலைகள் அமைப்பதே பெரும் புண்ணியம் என்று கூறும் அந்தக் கவிதை பெரும் புயலையே எழுப்பிவிடுகிறது.

மகாகவி பாரதியின் அந்த 'சோதிமிக்க நவ' கவிதை தனது மனதில் எழுப்பிய புயலை அடக்கமுடியாமல் உடையார் திணறினாலும், சற்று நேரத்தில் அந்த நிலையிலிருந்து விடுபட்ட அவர் ஓர் உறுதியான தீர்மானத்தை எடுத்துக்கொள்கின்றார். அதனை அவரது விசாலமான முகம் ஒரு கண்ணாடி போன்று வெளிக்காட்டுகிறது.

அடுத்தநாள் உடையாரின் வீட்டுக்குப் பக்கதில் இருந்த அவரின் பரந்த காணியின் ஒரு பகுதியில் முளைத்தெழுந்த பற்றைக் காடுகள் வெட்டி வெளியாக்கப்படுவதை அவரது மூத்தமகன் கண்காணிக்கின்றார். உடையார் அதனைப் பார்த்தவாறு அங்கு போடப்பட்ட ஒரு நாற்காலியில் காலுக்கு மேல் கால் போட்டுக்கொண்டு உற்சாகமாக அமர்ந்திருக்கின்றார்.

காணி வெளியாக்கப்பட்டு அதைச் சுற்றி கம்பிவேலி அடைக்கப்பட்டதைத் தொடர்ந்து அதில் ஒரு பாடசாலை அமைப்பதற்கான பணிகள் முன்னெடுக்கப்படுகின்றன. ஒரு நல்ல நாளில் பாடசாலைக்கான அடிக்கல்லை உடையார் நடுகின்றார்; ஊர் மகிழ்ச்சியில் திளைக்கின்றது.

வாகரை என்னும் பழந்தமிழர் கிராமத்தில் நாற்பதுகளின் இறுதிப் பகுதியில் தோற்றம்பெற்ற அந்தப் பாடசாலை இருண்ட வீட்டிற்கு ஒரு விளக்காகின்றது. அந்த விளக்கில் இருந்து எழும் வெளிச்சம் எதிர்காலத்தில் மிகப் பிரகாசமாக இருக்கும் என்று ஊரவர்களிடம் நம்பிக்கை தெரிவித்த உடையார் மகாகவி பாரதியின் 'அன்னயாவினும் புண்ணியம் கோடி ஆங்கோர் ஏழைக்கெழுத்தறிவித்தல்' என்னும் கவிதை அடிகளை வாய்விட்டுச் சொல்கிறார்.

எட்டயபுரத்து மகாகவியின் அந்த மந்திரச் சொற்கள் எட்டுத் திக்கும் புதிய வேதமாக ஒலிக்கின்றன.



## குறும்(புப்)பா - 48

வெளிநாட்டு மாப்பிள்ளை வந்தார்
விமரிசைக் கல்யாணஞ் செய்தார்
ஒளிவெள்ளம் வெடிமாலை விருந்துகளி யாட்டந்தான்
முடிந்ததுவந் தாள்முதல் மனைவி!

~ மலர் ~



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# நாட்பட்ட சிறுநீரகச் செயலிழப்பு
# இறுதிநிலை சிறுநீரகச் செயலிழப்பு

சிறுநீரகங்கள் போதுமான அளவு செயற்பட்டு உடல் சமநிலையைப் பேணமுடியாது போகும்போது அவை மீளமுடியாத பாதிப்புக்கு உள்ளாகின்றது. இந்நிலையில் அவை முற்றாகச் செயலிழந்துவிடும்.

ஓரளவு சிறுநீரகம் பழுதடைந்திருக்கும்போது அதன் காரணங்களைக் கண்டுபிடித்து சிகிச்சை அளிப்பதன் மூலமும், உணவுக் கட்டுப்பாடு மூலமும் முற்றாகச் செயலிழந்து போவதைத் தடுக்கவோ அல்லது பிற்போடவோ முடியும்.

பாதிக்கப்பட்ட சிறுநீரகங்களை மீண்டும் பழைய நிலைக்குக் கொண்டு வருதல் இயலுமானதன்று. பாதிப்பு தொடர்வதைத் தாமதப்படுத்தலாமே அன்றி முற்றாகப் பழைய நிலைக்குக் கொண்டுவருதல் இயலாது.

**இறுதிநிலை சிறுநீரகச் செயலிழப்புக்கு தற்போது நடைமுறையில் இரு வழிகள் உண்டு**

**01. சிறுநீரக மாற்றீடு**
**02. குருதிச் சுத்திகரிப்பு**

சிறுநீரக மாற்றீடு என்பது தகுதி வாய்ந்த, பொருத்தமான சிறுநீரகங்களை மற்றவர்களிடமிருந்து பெற்றுப் பொருத்திக்கொள்வது. இதில் நடைமுறையில் பொருட்செலவும் பல்வேறு சிரமங்களும் உண்டு; மிகுந்த கவனிப்பும் தேவை.

குருதிச் சுத்திகரிப்பு என்பது உடலுக்கு வெளியாக உபகரணங்கள் மூலம் குருதியை எடுத்து சுத்திகரித்து உட்செலுத்துவதாகும். இதற்கு நான்கு அல்லது ஐந்து மணித்தியாலங்கள் தேவைப்படும். கிழமையில் இரண்டு அல்லது மூன்று தடவைகள் இதனை மேற்கொள்ளவேண்டும்.



மருத்துவமனையில் தகுதி வாய்ந்தவர்களினால் இது செய்யப்படும். தொடர்ச்சியாக குருதிச் சுத்திகரிப்பு செய்துவருவதன் மூலம் சுகவாழ்வு வாழலாம். அத்துடன் தேவையான மருந்துகளும் உணவுக் கட்டுப்பாடும் அவசியமாகும் இவை தொடர்பான அனைத்துச் செயற்பாடுகளும் தகுதி வாய்ந்த மருத்துவர் மூலமே செய்யப்படவேண்டும்.

சிறுநீரக நோய்களுக்கு ஆங்கில வைத்தியத்தில் பல்வேறு மருந்துகளும் சிகிச்சை முறைகளும் இருப்பதுபோல் பக்கவிளைவுகளற்ற ஹோமியோபதி மருத்துவத்திலும் மிகச் சிறந்த மருந்துகள் உண்டு. அவைகளை நோயாளிகள் ஏற்ற விதத்தில் நோயின் குறிகளை ஆராய்ந்து எடுக்கவேண்டும்.

நீரிழிவு நோயினால் ஏற்படும் சிறுநீரகச் செயலிழப்புக்கு - **குப்ரம் ஆர்ஸ்**

சிறுநீரகச் செயலிழப்பினால் இரத்தத்தில் யூரியா அதிகரித்தால் கட்டுப்படுத்த - **யூரியா 3X**

அதேபோன்று இரத்தத்தில் கிரியாட்டினின் அதிகரித்தால் கட்டுப்படுத்த **ஈல்சீரம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

பழுதடைந்த சிறுநீரகங்களைச் சரி செய்யவும் உடம்பிலுள்ள அதிகரித்த நீரை வெளியேற்றவும் - **பொஹேர்வியா டிவுசா (தாய்த் திரவம்)**

சிறுநீரகங்களில் வலி, சிறுநீரை வெளியேற்றுவதில் எரிச்சல் - **காந்தாரீஸ்**

சிறுநீரகங்களில் கல் - **லைக்கோபோடியம்**

இன்னும் பல்வேறு மருந்துகள் ஹோமியோபதி மருத்துவத்தில் உண்டு. போலி மருத்துவர்களிடம் செல்லாது தகுதி வாய்ந்த ஹோமியோபதி மருத்துவர்களை நாடினால் மிகுந்த செலவின்றியும் பக்க விளைவுகளின்றியும் சுலபமாக சிறுநீரக நோய்களைக் கட்டுப்படுத்த முடியும்.

**– இன்னும் வரும்.... • தொகுப்பு: சித்தன்**

# கடுகுக் கதை 28 உந்துருளிக் கனவு

**2007ம் ஆண்டு:** சீட்டுப் பிடித்து ஓர் இலட்சம் ரூபா பணம் சேகரித்த அன்ரன் நீண்டநாள் தேவையான மோட்டார் சைக்கிள் ஒன்றை வாங்க ஆயத்தமானபோதுதான் மனைவியின் தம்பி வெளிநாடு போக காசு குறைவதாக வந்து அழுதான். அப்படியே அப்பணத்தை அவனுக்குத் தூக்கிக் கொடுத்தார். அவனும் வெளிநாடு சென்றுவிட்டான். அப்படியே அன்ரனையும் குடும்பத்தாரையும் மறந்தும் விட்டான்.

**2010ம் ஆண்டு:** அலுவலகத்தில் பத்து மாத இடருதவிக் கடனைப் பெற்றுக்கொண்ட அன்ரன் ஹீரோ கொண்டா காட்சியறை, பஜாஜ் காட்சியறை இரண்டுக்கும் சென்று மோட்டார் சைக்கிள்களைப் பார்த்து ஒவ்வொன்றைத் தெரிவுசெய்து வைத்துவிட்டு மனைவியைக் கூட்டிவந்து அவளுக்குப் பிடித்ததை வாங்கலாம் என்ற எண்ணத்துடன் வீடு வந்தார். அங்கு மனைவி கவலையுடன் காணப்பட்டாள்.

“என்னம்மா முகம் வாடிக் கிடக்கு?”

“உங்கட அப்பாவுக்குச் சுகமில்லையாம்... கொழும்புக்குக் கொண்டு போகோணுமாம்... காசு வேணுமெண்டு அம்மா வந்தவ...”

“வாங்க இந்தக் காசக் கொண்டு குடுத்திட்டு வருவம்...”



“அப்ப மோட்ட சைக்கிள்...!”

“இனி ஏதும் சம்பள அரியர்ஸ் வந்தால் அதில வாங்குவம்... ரெண்டர லட்ச மோட்ட சைக்கிளில வேலைக்குப் போறதிலும் பார்க்க முப்பது லட்சம் பெறுமதியான பஸ்ஸில, மழை வெயில் படாம வேலைக்குப் போறது பாதுகாப்புத்தானே...” என்றார் அன்ரன் சற்றும் கவலைப்படாமல் நகைச்சுவையாக.

(இப்போதெல்லாம் 2010ம் ஆண்டு ‘பஜ்ஜட்’டில் சம்பளம் கூடினால் எவ்வளவு அரியர்ஸ் வரும், என்ன மோட்டார் சைக்கிள் வாங்கலாம் என்ற கனவெல்லாவற்றையும் அன்ரன் விட்டுவிட்டார். ஏனென்றால் பஜ்ஜட்டே ஒரு கனவு போலத்தான்)

– பற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media




'உனக்காகவே ஒரு ரகசியம்' என்னும் தொடர் 'விகடனில்' தொடர்ந்து வந்தது. இதனை 'சத்குரு ஜக்கி வாசுதேவ்' கருத்துகளின் தொகுப்பாக அது வெளியிட்டது. எழுத்தாளர்கள் சபா அதனைத் தமிழ்ப்படுத்தியிருந்தனர்.

சில விடயங்களை எடுத்துவிளக்க 'சங்கரன்பிள்ளை' என்னும் பாத்திரத்தை அவர்கள் கையாண்டிருந்தார்கள். (நமது கடுகுக் கதையில் வரும் 'அன்ரன்' போல) அவற்றில் சிலவற்றைப் பார்ப்போம். அவை வெவ்வேறு அத்தியாயங்களில் தரப்பட்டவை.

• • •

கோடைக்காலம். சங்கரன்பிள்ளை கிராமத்திற்குக் குடிபெயர்ந்தார். ஆறு போகும் பாதை மணல்வெளியாகக் காய்ந்து கிடந்தது. அங்கே ஒரு குடிசை அமைத்து மனைவி மக்களுடன் வாழ்ந்து வந்தார்.

மழைக்காலம் வந்தது. ஆற்றில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது. எல்லாவற்றையும் சுருட்டி எடுத்துக்கொண்டுபோன வெள்ளம் சங்ரன்பிள்ளையின் குடிசையையும் விட்டுவைக்கவில்லை.

வெள்ளம் வடிந்தது. சங்கரன்பிள்ளை ஒவ்வொன்றாகத் திரட்டினார். மறுபடி அதே இடத்தில் குடிசை அமைத்தார். இயல்பான வாழ்க்கைக்கு மீண்டும் திரும்ப அவருக்கு ஆறுமாத அவகாசம் பிடித்தது. அதற்குள் அடுத்த மழை வந்தது. வெள்ளம் புரண்டது. குடிசையை அக்கக்காகக் கலைத்து அடித்துப் போனது. சங்கரன்பிள்ளை மீண்டும் பல மாதங்கள் போராடி குடிசையை அதே இடத்தில் அமைத்தார். அடுத்த வெள்ளத்திலும் குடிசை பறிபோனது.

சங்கரன்பிள்ளை ஒரு ஜோசியக்காரனைத் தேடிப் போனார். தன் ஜாதகத்தைக் காட்டினார். "ஜோசியரே! என் குடிசையை இன்னும் எத்தனை வருடங்களுக்கு இப்படி ஆறு அடித்துக்கொண்டுபோகும் என்று பார்த்துச் சொல்லமுடியுமா?" என்று கேட்டார்.

ஆறு புரண்டுவரும் பாதையில் குடிசையை அமைக்கக் கூடாது என்ற புத்திசாலித்தனம் இருந்தால் சங்கரன்பிள்ளை ஏன் ஜோசியரைத் தேடிப் போகப்போகிறார்?

• • •

JMJ 2011
MADRID

## 2011 இளையோர் தினத்தில் கலந்துகொள்ள ஆறு இலட்சத்திற்கும் மேற்பட்டோர் தெரிவு

2011 இளையோர் தினத்தில் கலந்துகொள்வதற்கு திருத்தந்தை பதினாறாம் பெனடிக்ட் முதல் நபராகத் தனது பெயரைப் பதிவு செய்துள்ளார் எனவும் ஸ்பெயினைத் தவிர பிற நாடுகளிலிருந்து இதுவரை ஆறு இலட்சத்துக்கும் மேற்பட்டோர் தங்கள் பெயர்களைப் பதிவுசெய்துள்ளனர் எனவும் தயாரிப்புக் குழுவினர் அறிவித்தனர். 120,000 இத்தாலியர்கள், 70,000 பிரெஞ்சு நாட்டவர், 50,000 போலந்து நாட்டவர், 25,000 வட அமெரிக்கர்கள் ஆகியோர் திருத்தந்தை நிகழ்த்தும் இந்த ஒருவார நிகழ்ச்சிகளுக்கெனப் பெயர்களைப் பதிவுசெய்துள்ளனர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

பனிப்பிரதேசத்திலிருந்த சித்தரைத் தேடிப் போனார் சங்கரன்பிள்ளை.

"மண்ணைத் தங்கமாக்கும் மந்திரம் உங்களுக்குத் தெரியுமாமே! எனக்குச் சொல்லித் தருவீர்களா?" என்று மண்டியிட்டார்.

சித்தர் சம்மதித்தார். மந்திரங்களை சங்கரன்பிள்ளையின் காதில் இரகசியமாகச் சொன்னார். சங்கரன்பிள்ளைக்கு மகிழ்ச்சி தாங்கவில்லை.

"இது வெகு சுலபமாக இருக்கின்றதே! இந்த மந்திரங்கள் நிச்சயம் வேலை செய்யும்தானே?"

"நிச்சயம் இது மண்ணைப் பொன்னாக்கும். ஆனால், ஒரு நிபந்தனை. மந்திரங்களை உச்சரிக்கும்போது நீ குரங்குகளைப் பற்றி நினைக்கக்கூடாது" என்றார்.

ஆனால் சங்கரன்பிள்ளை சிரித்தார். "போயும் போயும் குரங்குகளை நான் ஏன் நினைக்கப்போகிறேன்?"

ஆனால், சங்கரன்பிள்ளை மந்திரங்களைச் சொல்ல கண்களை மூடினால்போதும் குரங்குகளைப் பற்றி நினைக்கக்கூடாது என்ற நினைப்பே அவர் நினைவு பூராக ஆக்கிரமித்து இருந்தது. இருபத்துநான்கு மணிநேரமும் சிந்தனையில் குரங்குகள் நிரம்பி வழிந்தன. இரண்டு நாட்களுக்கு மேல் தாக்குப்பிடிக்க முடியாமல் சித்தர் காலில் போய் விழுந்தார் சங்கரன்பிள்ளை.

"பொன்னே வேண்டாம். என்னைச் சுற்றிக் கும்மாளமிடும் குரங்குகளிடமிருந்து என்னைக் காப்பாற்றுங்கள் அது போதும்"

• • •

சங்கரன்பிள்ளை தன் இரண்டு நண்பர்களுடன் ரயில் நிலையம் வந்தார். மூவருக்கும் சேர்த்து ஒரேயொடு பயணச் சீட்டு வாங்கினார். கிராமத்திலிருந்து வந்திருந்த மூவர் இதனைக் கவனித்தனர். ஒற்றை டிக்கற்றில் எப்படி மூவர் பயணம் செய்ய முடியும் என்று அவர்கட்கு பிரமிப்பு. ரயிலில் சங்கரன்பிள்ளையையே அவர்கள் கவனித்தனர்.

டிக்கற் பரிசோதகர் வருவதைப் பார்த்ததும் சங்கரன்பிள்ளையும் அவர் நண்பர்களும் சேர்ந்து ஒரே டாய்லட்டுக்குள் போய் ஒளிந்துகொண்டனர். "உள்ளே யார்? டிக்கற் ப்ளீஸ்" என்றார்.

வெளியில் ஒரு கை டிக்கட்டுடன் நீண்டது. அவர் அதைச் சரிபார்த்துவிட்டு போய்விட்டார். அப்புறம் உள்ளே இருந்த மூவரும் வெளியே வந்து உட்கார்ந்து கொண்டார்கள்.

கிராமவாசிகட்கு சங்கரன்பிள்ளையின் தந்திரம் புரிந்துவிட்டது. "ஆஹா, பிரமாதமான ஐடியாவாக இருக்கின்றதே" என்று நினைத்தார்கள்.

ஊர் திரும்பும் நாள் வந்தது. அந்த மூவரும் சேர்ந்து ஒரே டிக்கற் வாங்கினர். ஆனால் இம்முறை சங்கரன்பிள்ளையும் நண்பர்களும் ஒரு டிக்கற்கூட வாங்காமல் ரயிலில் ஏறினர். இது கிராமவாசிகளுக்குக் குழப்பமாகப் போய்விட்டது. டிக்கட் பரிசோதகர் வருவதைப் பார்த்ததும் கிராமவாசிகள் மூவரும் ஒரு டாய்லட்டில் போய் ஒளிந்துகொண்டனர்.

சங்கரன்பிள்ளை எழுந்தார். எதிர்ப்புறம் இருந்த இன்னொரு டாய்லட்டுக்குள் நண்பர்கள் இருவரும் போய்விட்டார்கள். சங்கரன்பிள்ளை கிராமவாசிகள் இருவரும் இருந்த டாய்லட்டைத் தட்டி 'டிக்கட் ப்ளீஸ்' என்றார். ஒரு கை டிக்கட்டை நீட்டியது. சங்கரன்பிள்ளை அந்த டிக்கட்டை வாங்கிக்கொண்டு எதிரில் இருந்த டாய்லட்டுக்குள் புகுந்து நண்பர்களுடன் இணைந்துகொண்டார்.

• • •

*அது சரி... சங்கரன்பிள்ளை இப்படி நீங்கள் எப்படியோ...?*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

சிறுவர்களுக்கு மட்டும்

முடிவுத்திகதி
30- 09 - 2010




# விவிலியம் கற்போம் - 91

(எண்ணிக்கை 27:1–23)

(பொருத்தமான சொற்களைத் தெரிந்து இடைவெளிகளை நிரப்புக)

யோசேப்புப் புதல்வரான மனாசே குடும்பங்களைச் சார்ந்தவர் செலொபுகாத்து. இவர் மனாசேயின் மைந்தர் மாக்கிரின் புதல்வர் கிலியாதுக்குப் பிறந்த ஏபேரின் மகன், இவருக்கு மக்லா, நோகா, ஒக்லா, மில்கா, திர்சா என்ற புதல்வியர் இருந்தனர். அவர்கள் வந்து மோசே, குரு எலயாசர், ................................... மக்கள் கூட்டமைப்பினர் அனைவர் முன்னிலையில் சந்திப்புக் கூடார வாயிலருகில் நின்று: எங்கள் தந்தை பாலை நிலத்தில் இறந்து போனார். கோராகைச் சார்ந்தவர்கள் ஆண்டவருக்கு எதிராகக் கூடிய கூட்டத்தினுள் அவர் இல்லை. அவர்தம் பாவத்துக்காகவே இறந்தார். அவருக்குப் ............................ இல்லை. இப்போதும் தமக்குப் புதல்வர் இல்லாத காரணத்துக்காக எங்கள் தந்தையின் பெயர் அவர் குடும்பத்திலிருந்து ஏன் நீக்கப்பட வேண்டும்? எங்கள் தந்தையின் சகோதரர்களிடையே எங்களுக்கும் பங்கு தாருங்கள். மோசே அவர்கள் வழக்கை ஆண்டவரிடம் கொண்டு வந்தார். ஆண்டவர் மோசேயிடம்: ....................................... புதல்வியர் கேட்பது சரியே; அவர்கள் தந்தையின் சகோதரரிடையே அவர்களுக்கும் உரிமைச் சொத்தில் பங்கு கொடுத்து, அவர்கள் தந்தையின் உரிமைச் சொத்து அவர்களுக்குக் கிடைக்கச் செய். நீ இஸ்ரயேல் மக்களிடம் கூறு: மகன் இல்லாமலே ஒருவன் இறந்து விட்டால் அவன் உரிமைச் சொத்து அவன் மகளுக்குச் சேர வேண்டும். அவனுக்கு .......................... இல்லையெனில் அவன் உரிமைச் சொத்தை அவன் சகோதரருக்குக் கொடுக்க வேண்டும். அவர்களும் இல்லையெனில் அவனுக்கடுத்த உறவினனுக்குக் கொடுக்க வேண்டும்; அவன் அதை உடைமையாக்கிக் கொள்வான். ஆண்டவர் ................................... கட்டளையிட்டபடி இது இஸ்ரயேல் மக்களுக்கு நியமமாகவும், விதிமுறையாகவும் விளங்கும். மேலும் ஆண்டவர் மோசேயிடம் கூறியது: இந்த அபாரிம் மலை மேல் ஏறிச் சென்று நான் இஸ்ரயேல் மக்களுக்குக் கொடுத்துள்ள நாட்டைப் பார். நீ அதைப் பார்த்த பின் ........................................ சேர்த்துக் கொள்ளப்பட்டது போன்று, நீயும் உன் மக்களுடன் சேர்த்துக்கொள்ளப்படுவாய். ஏனெனில் சீன் பாலைநிலத்தில் மக்கள் கூட்டமைப்பு தண்ணீருக்காக வாக்குவாதம் செய்தபொழுது நீங்கள் அவர்கள் பார்வையில் என்னைப் புனிதப்படுத்தாது என் வார்த்தையை எதிர்த்துக் கலகம் செய்தீர்கள். இவையே .......................... பாலை நிலத்தில் காதேசிலுள்ள மெரிபாவின் நீர்நிலைகள். மோசே ஆண்டவரிடம், "உயிர்க்கு எல்லாம் கடவுளாகிய ஆண்டவர் இந்த மக்கள் கூட்டமைப்புக்கு ஒருவனைப் பொறுப்பாளனாக ஏற்படுத்துவாராக; இதனால் அது மேய்ப்பனில்லா ஆடுகளாக இராது" என்றார். ஆண்டவர் மோசேயிடம்: நூன் புதல்வன் ......................... தேர்ந்து, அவன் மேல் உன் கையை வை. குரு எலயாசருக்கும் மக்கள் கூட்டமைப்பிலுள்ள அனைவருக்கும் முன்பாக அவனை நிற்கச் செய்; அவனைப் பொறுப்பாளனாக ஏற்படுத்து. மக்கள் கூட்டமைப்பின் அனைத்து மக்களும் ........................................ உன் அதிகாரத்தை அவனுடன் பகிர்ந்துகொள். அவன் குரு எலயாசருக்கு முன் நிற்க, அவனுக்காக எலயாசர் ஆண்டவர் முன்னிலையில் ஊரிம் வழங்கும் தீர்ப்பை நாடுவான்; அவனும் அவனுடன் இருக்கும் இஸ்ரயேல் மக்கள் அனைவருமான மக்கள் கூட்டமைப்பு முழுவதும் ............................................. வார்த்தையின்படியே வெளியே செல்லவும், உள்ளே வரவும் வேண்டும். ஆண்டவர் கட்டளைப்படியே மோசே செய்தார். யோசுவாவை குரு எலயாசர் மக்கள் அனைவர் முன்னிலையில் நிற்கச் செய்தார். ஆண்டவர் கட்டளையிட்டபடியே தம் கைகளை அவர் மேல் வைத்து அவரைப் பொறுப்பாளராக நியமித்தார்.

**விடைகள் :** **மோசேக்கு, ஆரோன், சீன், கீழ்ப்படியும்படி, யோசுவாவை, எலயாசரின், மகளும், புதல்வர்கள், செலொபுகாதின், தலைவர்கள்**

(வினாப்படிவத்திலேயே விடைகள் எழுதியனுப்பப்பட வேண்டும், பிறிதாக அனுப்பப்படும் விடைகள் போட்டியில் சேர்த்துக் கொள்ளப்படமாட்டாது)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# பரிசுப் போட்டி




## அறிவை வளர்ப்போம் – 91

(பொருத்தமான சொற்களின் கீழ் அடிக்கோடிடுக)

1. இலங்கையின் முதலாவது தமிழ்ப் பேராசிரியர்
(சுவாமி விபுலானந்தர், ஆறுமுகநாவலர், பண்டிதர் மு.கணபதிப்பிள்ளை)

2. 2012ல் 30வது ஒலிம்பிக் போட்டி நடைபெறவுள்ள நாடு
(அமெரிக்கா, பிரித்தானியா, பிரான்ஸ்)

3. சூரியனிலிருந்து ஒளிக்கதிர் பூமியை வந்தடைய எடுக்கும் நேரம்
(பத்து நிமிடங்கள், ஏழு நிமிடங்கள், எட்டரை நிமிடங்கள்)

4. பயோரியா எனும் நோய் தாக்கும் உடலுறுப்பு
(பற்கள், கண், காது)

5. கூழுக்கும் ஆசை ............................................................................
(மோருக்கும் ஆசை, மீசைக்கும் ஆசை, குழம்புக்கும் ஆசை)

6. 'செந்தாமரை' என்னும் சொல்
(உவமை, உம்மை, தொகை)

பெயர் : ..........................................................................................

முகவரி : ..........................................................................................

..........................................................................................


அனுப்பவேண்டிய முகவரி:
விவிலியம் கற்போம் / அறிவை வளர்ப்போம்– 91
தொண்டன்
அ. பெ. எண் – 44
மட்டக்களப்பு.

பரிசு அனுப்பவேண்டிய தபாலகம்:

..............................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



# போட்டி முடிவுகள்

## விவிலியம் கற்போம் - 89 விடைகள்

இஸ்ரயேலை, கூடாரங்களும், கேதுரு மரங்கள், கொம்புகள், பிலயாம், ஆசி கூறியுள்ளீர், தூதரிடம், செங்கோல், வேற்றினங்களில், அசீரியாவையும்

## அறிவை வளர்ப்போம் - 89 விடைகள்

1) மகாபாரதம்
2) கல்சியம்
3) ஒன்பது
4) கொல்வின் ஆர்.டி.சில்வா
5) பருந்தாகுமா
6) ஏவல்வினை

## *பரிசுகள் – அனுசரணை: அருள்தந்தை. அன்ரனி குரூஸ் CRS*

**இரு பிரிவுகளுக்கும் சரியான விடை எழுதி ரூபா 200/= பரிசு பெறுவோர்**

- கிரேசி போல்
  38/6, கொத்தி ஒழுங்கை
  திருகோணமலை
- சி. குளோரி மொன்ஷரா
  354, பிரதான வீதி
  வாழைச்சேனை

**ஒரு பிரிவுக்கு மட்டும் சரியான விடை எழுதி ரூபா 100/= பரிசு பெறுவோர்**

- அன்டனோ டெலன் செலர்
  353, பிரதான வீதி
  வாழைச்சேனை
- டிலான் டிலாந்தி
  மாதா கோயில் வீதி
  பெரிய கல்லாறு - 01

**சிறுவர் சிறுமியருக்கான வர்ணம் தீட்டும் போட்டி 41 முடிவுகள்**

- **முதலாம் பரிசு** - 300/=
  ச.நிக்சன்
  மின்சார நிலைய வீதி
  மூதூர் - 07
- **இரண்டாம் பரிசு** - 200/=
  செல்வி. S.விஷ்மிதா
  மே/பா S.N.தெய்வேந்திரன்
  1023 - பாலையூற்று
  திருகோணமலை
- 3ம் **பரிசு** - 100/=
  ச.ஜெலக்ஷன்
  10ம் வட்டாரம்
  குருக்கள் நகர்
  நெடுந்தீவு

**போட்டியில் பங்குகொண்ட அனைவருக்கும் எமது நன்றி. (ஆ – ர்)**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# "அவங்க பேசமாட்டாங்க"

நாடகங்கள்

*ஆசிரியர்: றொஹான் பேணாட்*

வெளிவந்துவிட்டது!




விலை: 250/-

"யதார்த்தமான சமகால நிகழ்வுகளை யதார்த்தமாக இலக்கியப்படுத்த முடியாதிருந்த சூழலில் துணிச்சலாகப் பல கருத்துகளைத் தனது நாடகங்களில் சொல்லியிருக்கிறார்"

– தமிழறிஞர் அகளங்கன்

அரங்கு கண்ட ஐந்து நாடகங்கள் நூலுருவில் உங்களுக்காக!

வெளியீடு: எழுத்தாளர் ஊக்குவிப்பு மையம்

தொடர்புகளுக்கு: சமூகத் தொடர்பு நிலையம்
அ.பெ.எண் - 44
மட்டக்களப்பு


அறிவை வளர்ப்போம் 89, விவிலியம் கற்போம் 89 ஆகிய இரு பிரிவுகளுக்கும் சரியான விடையளித்துப் பாராட்டுப் பெறுவோர்

- செ.தனுசியா, திருக்குடும்ப கன்னியர் இல்லம், பண்டத்தரிப்பு.
- R.விக்டர், 1176 - பாலையூற்று, திருகோணமலை.
- சின்னராசா யேசுதாசன், இலங்காபுரம், தன்னாமுனை.
- அ.ஸ்ரெலா பாரதி, கல்லடி, மட்டக்களப்பு.
- J. நிஷான், 120, இருதயபுரம் மேற்கு, மட்டக்களப்பு.
- நிலுசியா பேரின்பராசா, பாலமீன்மடு, மட்டக்களப்பு.
- ஜரின் குளோறியா, அன்புவழிபுரம், திருகோணமலை.
- சந்திரகுமார் கிறிஸ்டி சுலக்ஷன், ஜெயந்திபுரம், மட்டக்களப்பு.
- ஜெயராஜ் சிந்துஜா, அலிகம்பை, அக்கரைப்பற்று.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media